விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 316 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை (31.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பொலிஸை சுத்தம் செய்தால் போதைப்பொருள் ஒழியும்



### ஜனாதிபதி அநுர காட்டம்

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக ஒழிப்பதாக இருந்தால் முதலில் பொலிஸை சுத்தம் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம் என 15ஆம் பக்கம் பார்க்க

## துணைவேந்தர் ரவீந்திரநாத் பற்றி பிள்ளையான் ஏதும் அறியாதவர்



### முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் கம்மன்பில



(கொழும்பு)

தடுப்புக்காவலில் உள்ள பிள்ளையானுக்கு, காணாமல் ஆக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் 15ஆம் பக்கம் பார்க்க

### போதை ஒழிப்பு - முழு நாடுமே ஒன்றாக

# அரசியல்வாதிகளின் ஆசியுடனேயே நாட்டுக்குள் போதைவஸ்து பரவியது!

### ஜனாதிபதி அநுர ஆவேச உரை



(கொழும்பு)

போதைப்பொருள்களுக்கு எதிரான பொதுமக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம், போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டிலிருந்து முற்றாக ஒழித்து, எதிர்காலச் சந்ததியினரையும் சமூகத்தையும் அதிலிருந்து மீட்டெடுப்போம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சூளுரைத்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு

## போதைப்பொருள் வர்த்தகர்கள் உடனடியாகச் சரணடைய வேண்டும்

### தேசிய செயற்றிட்டத்தை ஆரம்பித்து ஜனாதிபதி உரை

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து விலக வேண்டும். போதைப்பொருள் வர்த்தகர்கள் உடனடியாகச் சரணடைய வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார 14ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகள் அதிகரிப்பு

### விடுக்கப்பட்ட அவசர எச்சரிக்கை

(கொழும்பு)

சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான நிதி மோசடிச் சம்பவங்கள் குறித்து தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து 15ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்து தடுப்பு அரசு இரட்டை வேடம்



### சாடுகிறார் நாமல் எம்.பி

(கொழும்பு)

போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக அரசாங்கம் இரட்டை வேடம் 15ஆம் பக்கம் பார்க்க

## போதைவஸ்தை ஒழிக்க துரித தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டுடன் இணைந்த வகையில் 24 மணி நேரமும் செயற்படும் வகையிலான துரித தொலைபேசி இலக்கம் ஒன்றைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்கு 15ஆம் பக்கம் பார்க்க

### கடந்த மூன்று நாளில்

## போதைவஸ்துக்களுடன் யாழில் 8 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகளின் 15ஆம் பக்கம் பார்க்க

### நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி உடனிருப்பு வேண்டுதல் கவனயீர்ப்புப் போராட்டம்



"செம்மணி உடனிருப்பு வேண்டுதல்" என்ற தொனிப் பொருளில் தமிழர் இனப்படு கொலைக்கு நீதி வேண்டி, தேசிய கிறிஸ்தவ மன்ற ஆயர் பேரவையினரால் நேற்று வியாழக்கிழமை (30) செம் மணி வளைவுக்கு அருகில், கவனயீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இந்த அடையாளப் போரா ட்டத்தில் பல்வேறு மாவட்டங் களின் மறை மாவட்ட ஆயர் கள், அருட் சகோதரர்கள் பங்கெடுத்தனர்.

முன்னதாக அணையா தீப தூபிக்கு மலர்மாலை அணி வித்து அஞ்சலி செலுத்திய தேசிய கிறிஸ்தவமன்ற ஆயர் பேரவையினர் அங்கிருந்து ஊர் வலமாகச் சென்று மனித புதைகுழி காணப்படும் செம் மணி சித்துப்பாத்தி இந்து மயான நுழைவாயிலில் அஞ் சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

# அம்புஜனின் 'காற்புள்ளி' கவிதை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

இளங் கவிஞர் அம்புஜ னின் "காற்புள்ளி" கவிதை நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப் பாணம் திருமறைக்கலா மன்ற கலைத்தூது கலை யகத்தில் இடம்பெறும்.

கவிஞர் கு.வீரா தலை மையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறை சிரே ஷ்ட விரிவுரையாளர் திரு மதி நவதர்ஷனி கருணா கரன் மற்றும் பிரதி அதிபர் லோகேஸ்வரன் சுரேன் ஆகியோர் சிறப்பு விருந்தின ராகவும் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் மாமனி தர் கவிஞர் நாவண்ண னுக்கு அஞ்சலி செலுத் தப்படும். (ந-7)

# பப்ஜி விளையாட்டு; இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் மீட்டர் வட்டிக்கு பணம் பெற்று, பப்ஜி விளையாடி, பெரும் நஷ்டம் அடைந்தமையால் உயிர்மா ய்க்க முயன்று, ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த சில வருடங்களாக பப்ஜி விளையாட்டுக்கு அடி மையாகியுள்ளார்.

அந்த விளையாட்டில்பணம் கட்டுவதற்காக மீற்றர் வட் டிக்குப் பணம் வாங்கியுள்ளார்.

இந்நிலையில் கடன் தொகை அதிகரித்த போது, கடன் கொடுத்தவர்கள், இளைஞனின் வீட்டாருக்கு பணம் கேட்டு நெருக்கடியை கொடுத்தவேளை வீட்டார், தமக்குச் சொந்தமான காணி ஒன்றினை விற்று கடனை அடைத்துள்ளனர்.

எனினும் தொடர்ந்தும் குறித்த இளைஞன் பப்ஜி விளையாட்டுக்காக பெருந் தொகை பணத்தினை மீற்றர் வட்டிக்கு வாங்கி செலவழித்து ள்ள நிலையில்,

உயிர்மாய்க்க முயன்ற போது அவரை மீட்டு, யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதித்த நிலையில், சிகிச்சை பெற்றுவந்த அந்த இளைஞன் நேற்று உயிரிழந் துள்ளார். (ந-7,33)

# மாடு குறுக்கிட்டமையால் தடம்புரண்ட பொலிஸ் ஜீப்

முல்லைத்தீவு மாங்கு ளம் வீதியில் மணவாளன் பட்டமுறிப்புக்கு அண்மி த்த பகுதியில் நேற்று பொலிஸ் ஜீப் வாகனம் ஒன்று தடம்புரண்டு விபத் திற்குள்ளாகியுள்ளது.

குறித்த வீதியில் பய ணித்த பொலிஸாரின் ஜீப் வாகனத்தின் முன் திடீ ரென மாடுகள் குறுக்கிட்ட மையால் வாகனம் கட்டுப் பாட்டை இழந்து வீதியிலி ருந்து விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் உயிர்ச் சேதங்கள் ஏதும் ஏற்படாத போதிலும் பொலிஸார் சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் ஜீப் வாகனமும் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருவதுடன் சேதமடைந்த வாகனத்தை மீட்டு கொண்டு சென்றுள்ளனர். (ந-7,299)

## மரண அறிவித்தல்

மலர்வு 19 - 03 - 1948



உதிர்வு 28 - 10 - 2025

### திருமதி.காந்திமதி யோகநாதன் (ஆச்சி)

மலேசியாவை பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி மற்றும் இறாகமவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.காந்திமதி யோகநாதன் அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை (28.10.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை தில்லையம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற O.T நடராஜா, காலஞ்சென்ற திலகவதி, O.T செல்வராஜா, காலஞ்சென்ற O.T ஆனந்தராஜா, O.T தர்மராஜா மற்றும் காலஞ்சென்ற இராஜசுலோஜனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் Dr.சுதர்சினி (ஆதார வைத்தியசாலை, நிக்கவரட்டிய), தனுசாந்தினி (விரிவுரையாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்) மற்றும் குகதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.விமலன் (இறாகம வட கொழும்பு போதனா வைத்தியசாலை), அஜந்தன் (மென்பொறியியலாளர்) ஆகியோரின் மாமியாரும் தாருகேஷ், தசரத் அர்வின், ஜஷ்வந்தி மற்றும் வர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை, மகிந்த மலர்ச்சாலையில் சனிக்கிழமை 01.11.2025 காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை 02.11.2025 அன்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு மதியம் ஒரு மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

307/2, மகரநுகேகொட,
இறாகம.

077 315 0288
077 949 1020

தகவல்:
குடும்பத்தினர்

(C-4225)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.07.1968

உதிர்வு 18.10.2018

அமரர்

### பொன்னம்பலம் கஜேந்திரன்

(கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் கிளை முகாமையாளர்)

திதி : ஐப்பசி வளர்பிறை தசமி
31.10.2025

ஏழு ஆண்டுகள் கடந்ததய்யா
ஏழை மனம் கலங்குதய்யா
பேராசை இல்லாத பாசம் அதிகம் வைத்தாய்
ஒளிவுமறைவு இல்லாத உன் ஒப்பற்ற பேச்சினை
எப்போது கேட்போம் ஐயா! உன்னோடு கூடி வாழ்ந்ததினால்
கொண்டிருந்த குதூகலம் உன் இழப்பால் ஓடி ஒழிந்ததையா!
காலங்கள் பல கடந்தாலும் உன் நினைவோடு நானிருப்பேன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

பூதன் வயல் சந்தி,
தமராபுரம், முள்ளியவளை.

அன்பு மனைவி:-
க.கிருஷ்ணபவானி

(1685)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க ஒன்றிணையுங்கள்!

## அரசியல் கட்சிகளிடம் டிலான் வலியுறுத்து



**(கொழும்பு)**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.**

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் கோரிக்கையாகும்.

பல வருடங்களாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிச் சிந்திக்காமல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்குரிய முக்கிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது என குறிப்பிட்டுள்ளார். (நி)

## குடிநீர் போத்தல்களில் SLS முத்திரை கட்டாயம்

### மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

குடிநீர் போத்தல்களில் SLS தயாரிப்பு சான்றிதழ் முத்திரை கட்டாயமாக்கப்பட வேண்டுமென்ற நுகர்வோர் விவகார அதிகாரசபையின் புதிய உத்தரவு, 2026 ஏப்ரல் முதலாம் திகதியிலிந்து அமுலுக்கு வருவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, குறிப்பாக குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, திரவ பானங்களை எடுத்துச் செல்வதில் மீண்டும் பயன்படுத்துவதற்கு ஏற்ற பிளாஸ்ரிக் போத்தல்கள் SLS 1616 விபரக்குறிப்புகளுக்கு இணங்க வேண்டும்.

குழந்தைகளுக்கான பிளாஸ்ரிக் பொருட்களால் செய்யப்பட்ட உணவளிக்கும் போத்தல்கள் SLS 1306 விபரக்குறிப்புகளுக்கு இணங்க வேண்டும்.

2003 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 12(1)இன் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

## பாடசாலை நேர நீடிப்புக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டு (2026) ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தைப் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்ததையடுத்து, இந்த உத்தேச நகர்வுக்கு ஒரு போதும் இணங்கப் போவதில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் திறக்கும்போது, ஆசிரியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ ஆங்கில நாளிதழொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

"இந்த முடிவை அரசாங்கம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இது எந்தவொரு உளவியல் அல்லது கல்வி ஆய்வு பூர்வமான முடிவும் அல்ல. எனவே, பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்," என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த முன்மொழிவுக்கு சங்கம் எந்தக் காரணம் கொண்டும் இணங்காது என்றும், ஆனால் அதிகாரிகள் தரப்புடன் கலந்துரையாடல்களை நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (நி)




கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'திரைப்படக்கலையை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்வோம்' என்னும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவில் குறும்படத்திரையிடலும் கலந்துரையாடலும் கோப்பாய் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

(படம்:-சிவசாந்தன்)




## இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பு

### புள்ளிவிபரத் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையானது ஆண்டுதோறும் 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2012 ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் சனத்தொகையானது, ஆண்டுதோறும் சராசரியாக 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகச் சனத் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த சனத்தொகைப் போக்கைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த உத்தியோகபூர்வத் தரவானது, தேசிய மட்டத்தில் மக்கள்தொகை வளர்ச்சி மெதுவாகவும் சீராகவும் நடைபெற்றுள்ளதைக் காட்டுகிறது.

இந்தச் சனத்தொகை அதிகரிப்பு வீதம் 12 வருட காலப்பகுதியை உள்ளடக்கியதாகும். ஆண்டுக்கு 0.5% என்ற இந்த மிதமான அதிகரிப்பு வீதம், நாட்டின் பிறப்பு வீதம், இறப்பு வீதம் மற்றும் நிகர குடியேற்ற வீதம் ஆகிய காரணிகளின் ஒருங்கிணைந்த விளைவைச் சுட்டிக்காட்டுகிறன.

சனத்தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள இவ்வாறான தரவுகள், அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களை வகுப்பதற்கும், பொதுச் சேவைகளைத் திட்டமிடுவதற்கும் அத்தியாவசியமான தகவல்களாகும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை விவகாரத்தை கண்டு கொள்ளாத அநுர அரசு

## பிரிட்டனிடம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அரசாங்கம் தாமதித்து வருவதாக இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக்கிடம் சுட்டிக்காட்டியுள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகள் மேற்படி அந் நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு அரசாங்கத்தின் மீது பிரிட்டன் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று அண்மையில் கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் சிவில் சமூகத்தின் சார்பில் தேசிய சமாதானப்பேரவையின் தலைவர் கலாநிதி ஜெஹான் பெரேரா, சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசியப்பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரன, சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா, சட்டத்தரணி ஷபானா குல்-பேகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின்போது இலங்கையின் சமகால மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கேட்டறிந்த பிரிட்டன் உயர்ஸ்தானிகர், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினார்.

அதன்படி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிப்பீடமேறி ஒரு வருடகாலம் பூர்த்தியடையவுள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், நிகழ்நிலைக்காப்புச் சட்டத் திருத்தம், அரசியல் கைதிகள் விடுதலை, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பன உள்ளடங்கலாகத் தேர்தல் பிரசாரத்தின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமை குறித்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் உயர்ஸ்தானிகரிடம் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று இலங்கையை காலனித்துவ ஆட்சியின்கீழ் வைத்திருந்த நாடு என்ற ரீதியிலும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளுக்குத் தலைமை வகித்த அமெரிக்கா அதிலிருந்து விலகியதன் பின்னர் அதற்குத் தலைமை தாங்கும் நாடு என்ற ரீதியிலும் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் முக்கிய மறுசீரமைப்புக்களை உறுதிப்படுத்துவதற்குரிய அழுத்தங்களை வழங்கவேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்கு இருப்பதாகவும் அவர்கள் உயர்ஸ்தானிகரிடம் எடுத்துரைத்தனர். (ந-7)


# Invitation for Bids (IFB)

## Democratic Socialist Republic of Srilanka
## Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy.
## Northern Province

### Bidding Documents for Procurement of Plastic Crusher

1. **The Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy,** Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Plastic crusher as in table below **and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**

| No | Bid No | Description of Goods | Employer's Estimated Cost (Rs. Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(14)/ 03/Plastic crusher(1)/2025 | Procurement of Plastic crusher | 2.1 | 30 days | 03.01.2026 | 21000.00 | 31.01.2026 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. Interested eligible bidders may obtain further information on public working days between **09:00 hrs** and **15:00 hrs** from **31st October 2025 to 14th November 2025** from **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy** and inspect the bidding documents at the same place on the above time.
   TP: -021 224 1130, Email- vnpskks@yahoo.com
4. Qualification requirements are include possessing the minimum 3 years' experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
5. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address **Chairman, Valikamam North Pradeshiya Sabha-Kollankaladdy** from **31st October 2025 until 14th November 2025 from 09.00 hrs to 15.00 hrs** on public working days and upon payment of non-refundable fee of Rs 3,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
6. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the **"Bid number"** on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to **Chairman, Divisional Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kollankaladdy** on or before **15th November 2025 at 11.00 hrs.** Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
7. The Pre-Bid Meeting will be held at **Valikamam North Pradeshiya Sabha-Kollankaladdy on 06th November 2025** at 14.00 hrs, Interested Bidders May Participate in this Meeting their own expenses.
8. The Bid shall be valid up to 49 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kollankaladdy.**

(C-4218) 31.10.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்கலாநிதி டேவிட் வின்சன் பற்றிக் அடிகளாரின் "விடியல்" என்ற போதைப்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு. அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

மாற்றம் அறக்கட்டளையும்-யாழ் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வானது மாற்றம் அறக்கட்டளை இயக்குநர் பே.பெனிக்னஸ் தலைமையில் நடைபெற்றது. (படம்:- சுபேசன்)


# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண காணிப் பதிவகத்தில்
கடமையாற்றும்
**பாலசிங்கம் பத்மராஜா**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்:
**பாலசிங்கம்**
**நாகரத்தினம்மா**
அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்! சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



பதிவாளர் நாயகம்
திணைக்களம், யாழ்ப்பாணம்.
ஊழியர் நலன்புரிச்சங்கம்
(C-4219)

# நிறுக்கும், அளக்கும் உபகரணங்களுக்கு முத்திரை பதித்தல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள் என்பவற்றில் பயன்படுத்தும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களுக்கு முத்திரை பதித்தல் எதிர்வரும் 2025.11.03 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 2025.11.04 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைகளில் வல்வெட்டித் துறை நகராட்சிமன்ற பொது நூலக முன்றலில் நடைபெறும்.

அனைத்து வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தங்கள் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களுக்கு முத்திரை பதித்துக்கொள்ள முடியும் என வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தவிசாளர் திருமதி.தவமலர் சுரேந்திரநாதன் அறியத் தந்துள்ளார். (8)

# கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும்-சென்னை லெஜென்ஸ் ரோட்டரிக் கழகமும் இணைந்து கடந்த புதன்கிழமை கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கருத்தமர்வு ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மாணவர்களுக்கு போஷாக்கு, மன வலிமை மற்றும் உடற்பயிற்சி தொடர்பாக பயிற்சி வழங்கப் பட்டிருந்தது .செயலமர்வினை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர் முன்னெடுத்திருந்தார். (8-30)

# பெரியோரைத் துணைக்கோடல்

மூத்தவர்களை எமக்குத் துணையாகக் கொண்டு வாழ்வது நன்று. அறத்தைத் துணையாகக் கொண்டு வாழும் பெரியோர் பலர் உளர். அவர்களுடைய நெருக்கமான தொடர்பு எமது வாழ்வைச் செம்மைப்படுத்தும்.

மனித வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் இரு வகைப்படும். ஒன்று தெய்வ ஆற்றலால் வரும் துன்பங்கள். அவை வருமாறு, மழை மிகுதியாலும் காற்று, தீ, பிணி என்பவற்றாலும் வருவன. மற்றது, மக்களால் வரும் துன்பம். அவை பகைவர், கள்வர், சுற்றத்தவர், வினைசெய்வார் என்பவர்களால் வரும் துன்பங்கள். முதல் கூறப்பட்ட துன்பம் கடவுளர்களையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளால் நீங்கும். மக்களால் வரும் துன்பங்கள் சாம, தான, பேத, தான தண்டங்களால் நீக்கப்படும். ஆனால் இவ்விருவகைப்பட்ட துன்பங்களையும் நாம் பெரியோரைத் துணையாகக் கொண்டு நீக்கிவிட முடியும்.

பெரியாரைத் துணையாகக் கொள்வது ஓர் அரிய பேறாகும். ஆனால் இத்தகைய பெரியோர் யார் என்பது இன்று எவ்லோரும் வினாவும் வினாவாகும், பெரியோர் என்பது அவர்களுடைய அறிவு ஆற்றலாலும் வினைத் திறனாலும் நன்கு வெளிப்படும். நீண்ட கால வாழ்வியல் அனுபவம் பெரியோருக்கு இருப்பதால் அவர்களால் மற்றவர்களை நன்கு நெறிப்படுத்த முடியும். எம்மை நெறிப்படுத்தும் பெரியோரில் பெற்றோரும் ஆசிரியரும் முதன்மையானவர்கள். அவர்களுடைய வழிகாட்டல் எமது வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த உறுதுணையாய் நிற்கும்

இவ்விரு பெரியோரும் மனித வாழ்வியலில் இரு நிலைகளிலே சிறந்த பயிற்றுநர்களாகப் பணியாற்றுபவர்கள் குழந்தைப் பருவநிலையில் பெற்றோரின் வளர்ப்பில் மனித உறவுகளையும் குணவியல்புகளையும் பயிலும் வாய்ப்புக் கிடைக்கிறது.

ஆசிரியருடைய கற்பித்தலிலும் நெறிப்படுத்துவதிலும் வையகத்து அறிவும் தேடலும் கிடைக்கின்றன. இதுவே கல்விச் செல்வமாகவும் கேள்விச் செவ்வமாகவும் எம்முடன் அழியாது நிற்பவையாகும்.

பெரியோருடைய வாழ்வியல் நடைமுறைகள் யாவும் மரபானவை, பாரம்பரியமானவை. இன்றைய விரைவான மனித வாழ்வியல் ஓட்டத்தைத் தடுக்க வல்லவை. அவர்களுடைய விழுமியப் பண்புகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. அறிவுரைகளை என்றும் நினைவில் கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்திப் பழமொழிகளும் தோன்றியுள்ளன. "மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் முதுமொழிகள் இன்றும் வழக்கிலுள்ளன. பெற்றோரை "இரு முதுகுரவர்" எனச் சிறப்பாக அழைக்கும் மரபும் உண்டு, இவர்களைக் கண்கண்ட தெய்வங்கள்" என்றும் சிறப்பாக அழைப்பர்.

ஆசிரியர்கள் எமக்குக் கிடைத்த அடுத்த தெய்வங்கள் ஆவர். எமக்குத் தேவையான அறிவைப் புகட்டி எம்மை நெறிப்படுத்துபவர்கள்.


முற்காலங்களில் வாய்மொழிக் கல்வி மரபே நிலவியது.ஆசிரியருடைய கற்பித்தல் கேள்வி மூலம் உள்வாங்கப்பட்டது. அதன் பின்னர் ஏட்டுக் கல்வி மரபு தோன்றியது. கற்க வேண்டிய நூல்கள் யாவும் ஏடுகளிலே எழுதப்பட்டன. எனினும் போதிய ஏட்டுப்படிகள் இல்லாமையால் ஆசிரியரது வாய்மொழி அறிவூட்டலே தொடர்ந்தது.

19 ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டவர். அச்சியந்திரத்தை அறிமுகம் செய்த போது பாடநூல்கள் அச்சிடப் பட்டன. கற்போருடைய கைகளிலே பாடநூல்கள் இருந்தமையால் ஆசிரியருடைய வாய்மொழி கருத்தூன்றி உள்வாங்கப்படவில்லை. இது பெரியோரான ஆசிரியரை மதிக்காத ஒரு நிலையை இளையவர்களிடையே ஏற்படுத்தியது. இன்று பொறிமுறைக் கல்வியின் வரவால் இந்நிலையிலே மேலோங்கி வருகிறது.

இதனால் பெரியோருடைய துணை இன்றிப் பொறிமுறைகளின் துணைகொண்டு வாழலாம் எனக் குறிப்பாக இளைய தலைமுறை நம்பியுள்ளது . பெரியோருடைய இயற்கையோடு இயைந்த வாழ்வியல், பழைமையானது எனப் புறந்தள்ளப்படுகிறது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் பொறிமுறைக்கையாட்சியும் மேலைத்தேயத்தவரால் தமிழரிடையே விரைவாகச் செல்வாக்குப் பெற்றுள்ளன. மனித வலு மதிப்பிழந்து விட்டது. எந்திர வலுவே எல்லோராலும் விரும்பப்படுகிறது. வாழ்வியல் நடைமுறைகளும் தளங்களும் செயற்கையாகக் கட்டமைக்கப்படுகின்றன. பெரியோருடைய அறிவுரைகள் தேவையற்றவை என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது. அதனால் வீடு, சமூகம், நாடு என்ற மனித வாழ்வின் மூன்று தளங்களிலும் சீர் குலைவுகள் ஏற்பட்டுள்ளன, இதனைக் காலம் செய்த மாற்றம் என கருதும் தவறான நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதுவே இன்றைய மனித வாழ்வின் சீர்குலை வுக்குக் காரணமாகும்.

வெள்ளி நற்சிந்தனை 10



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

31.10.2025
ஐப்பசி 14, வெள்ளிக்கிழமை
தசமி பின்னிரவு 4.38 மணிவரை

அவிட்டம் பிற்பகல்3.03 மணி வரை
சுப நேரம் 06.33-07.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

சுப முகூர்த்த நாள்
சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்**
குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்**
சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**கடகம்**
கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசைகாட்டவேண்டிய நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**
முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், இனத்தார் பகை மாற இன்பங்கள் கூடும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்**
வழிபாட்டில் ஆர்வம் கூடும், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**விருச்சிகம்**
சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு**
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வியாபார விரோதம் விலகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்**
செய்தொழில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**
சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**
சுப காரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்

நினைவாற்றலே கற்பனைக்கு உணவளிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாமன்னன் இராசராச சோழனின் சதய விழா

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு பெருவுடையார் திருக்கோவிலில் மாமன்னர் இராசராச சோழனின் 1040 ஆவது ஆண்டு சதய விழா இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு "ஈழத்திரு நாடும் சோழர்களும்" எனும் தலைப்பில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் உரையாற்றவுள்ளார். (3)

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் பாட சாலை அதிபர் திருமதி. செந்தினி ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்வி ஆசிரிய வளவாளர் திருமதி. ஷர்மிளா கணேசராஜா, கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி. நகுலராகினி தங்கினி ராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# காசிநாதன் விமலநாதனின் நூல்கள் அறிமுக நிகழ்வு

(சாவகச்சேரி)

காசிநாதன் விமல நாதனின் "பஜனாமிர்தம்" தொகுப்பு நூல் மற்றும் "இனிய தமிழ் கற்போம் இந்து சமயம் அறிவோம்" நூல்களின் அறிமுக நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு டச் வீதி மீசாலை மேற்கு எனும் முகவரியில் உள்ள பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ் இணைய கல்விக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ரஜனி காந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் மத்தியஸ்த பயிற்றுநர் ப.சனாதன சர்மா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு ஆசிரியவாண்மை விருத்தி நிலைய விரிவுரையாளர் சி.இளந்திரையன், அகில இலங்கை அர்ச்சகர் குருமார்சபை தலைவர் க.கிருபானந்தக் குருக்கள், உலக சுகாதார நிறுவன ஆலோசகர் கா.ரகுநாதன், தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஈ.புனிதகுமாரி, நடன ஆசிரியர் ஸ்ரீ.விமலகுமாரி, வே.தியானந்தராஜ குருக்கள், ப.ஜெயக்குமாரக் குருக்கள், கு.கஜேந்திரக் குருக்கள், வி.பாலகுமாரக் குருக்கள், வே.சண்முகராஜகுருக்கள், கு.ரிஷாங்க குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் மதிப்பீட்டு உரையினை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.முருகதாஸ் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-30)



## வட மாகாண சபை
## 2026 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வட மாகாண சபைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உப அலுவலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2025 டிசம்பர் மாதம் 01 ஆம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விபரங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து அல்லது மாகாண் சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் இயங்குகின்ற மாகாணத்திறைசேரி அலுவலகத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளிலுள்ள நிதிக்கிளைகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விபரங்களுக்கு கணக்காளர், மாகாணத் திறைசேரி, வடமாகாணம். அவர்களுடன் தொலைபேசி இல. 0212213540 மூலம் தொடர்பு கொள்ளவும்.

**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**மாகாணசபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**

(C- 4221)


# யாழ்.மாவட்ட செயலகத்திற்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்திற்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளராக பொன்னம்பலம் ஸ்ரீவர்ணன்• நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றைய தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீப்னிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் வடக்கு மாகாண சபையின் சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் ,வடக்கு மாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை / பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 150 |
| தக்காளி | 200 | 200 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 150 | 80 |
| கோவா | 200 | 200 | 200 | 140 |
| கரட் | 150 | 250 | 250 | 150 |
| பூசணி | 80 | 100 | 100 | 25 |
| புடோல் | 200 | 200 | 250 | -- |
| வாழைக்காய் | 100 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 180 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 300 |
| வெண்டக்காய் | 200 | 200 | 300 | 100 |
| கருணைக் கிழங்கு | 250 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 400 | 150 | 250 | 300 |
| லீக்ஸ் | 150 | 250 | 200 | 130 |
| பீற்றூட் | 150 | 200 | 150 | 100 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 350 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 400 | 150 |
| போஞ்சி | 400 | 600 | 500 | 420 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 120 | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 1600 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 150-200 | 150 |
| இராசவள்ளி | 800 | 600 | 800 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 600 | 400 | -- |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 60 |
| பொன்னாங்காணி | 120 | 150 | 60 | 40 |
| வல்லாரை | 80 | 100 | 80 | 40 |
| [illegible] | 100 | 100 | 200 | -- |

## வருமானப் பரிசோதகர் பதவிக்கு

# ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளதாகவும் அதற்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்களை தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய சகல பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் அனுப்பிவைக் கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393.48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப் பாணம்" எனும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டையுடன் பிரவேசிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் திரு.ந.பரமேஸ்வரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு சிறப்பு மலர் 31.10.2025



## நாச்சிமார் கோவில் பிரதம குருவின் ஆசியுரை

யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு. ந. பரமேஸ்வரன் அவர்களுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகிறேன்.

திரு.ந. பரமேஸ்வரன் அவர்கள் எமது ஆலயச் சூழலில் உள்ள யா/ பெரிபுலம் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பொறுப்பேற்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழிகாட்டியாகப் பெரும் சேவையாற்றியுள்ளார். இவரது சேவைக்காலத்தில் பாடசாலை பெரும் வளர்ச்சியடைந்ததுடன் தமது 200ஆவது ஆண்டு விழாவினையும் கொண்டாடியது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இவர் ஆசிரியர் பணிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து 32 வருடங்கள் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், அதிபராகவும் அரும் பணியாற்றியுள்ளார். இவர் ஓய்வுக் காலத்தில் நீடித்த நலமும், குன்றா வளமும் பெற்று மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல காமாட்சி அம்பாளின் அருள் கிடைக்க ஆசி வழங்குகிறேன்.

**சிவ.ஸ்ரீ சி. மங்களேஸ்வரக்குருக்கள்.**
**பிரதம குரு,ஸ்ரீ காமாட்சி அம்பாள்**
**தேவஸ்தானம் (நாச்சிமார் கோவில்)**



## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மூன்று தசாப்த காலம் கல்விச் சமூகத்திற்கு ஆசிரியர், அதிபராக நீங்கள் ஆற்றிய பணி மகத்தானது. எம் சமுகத்துக்கு, நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்க நீங்கள் புரிந்த சேவை அளப்பரியது . அர்ப்பணிப்பும் தன்னம்பிக்கையும் தளராத உறுதியும் கொண்ட தங்கள் தலைமைத்துவம் எமது வலயப்பாடசாலைகளில் ஒன்றான யாழ்.பெரியபுலத்தில் மிளிர்ந்ததனை நான் கண்கூடாகக் கண்டுள்ளேன் . ஆசிரியர்களுடனும் , மாணவர்களுடனும் நீங்கள் பழகிய விதம் மிகவும் கண்ணியமானது. உங்கள் பணியில் ஓய்வு பெறும் இவ்வேளையில் மனத்திருப்தியுடன் பணி புரிந்ததை உணர்வீர்கள் என நம்புகிறேன் .

மாணவர்களின் நல்வாழ்விற்காக ஓய்வு இன்றி உழைத்த நீங்கள் மன மகிழ்வுடனும் உடல் ஆரோக்கியத்துடனும் ஓய்வு காலம் ஒளிமயமாக மாற மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி.மாலதி முகுந்தன்,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.**



## வாழ்த்துச் செய்தி

தங்கள் தலைமைத்துவத்தின் கீழ் பெரியபுலம் பாடசாலை அடைந்த வளர்ச்சி பாராட்டத்தக்கது. கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெறுவதற்கு நீங்கள் வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க வழிகாட்டல், இந்த கோட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது.

ஒரு சிறந்த கல்வியாளராக, நிர்வாகியாக, தலைமை ஆசிரியராக நீங்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் வருங்கால சந்ததியினருக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையும் என்பதில் ஐயமில்லை. உங்கள் அனுபவமும், சீரிய சிந்தனைகளும் கல்விச் சமூகத்தால் என்றும் நினைவுகூரப்படும்.

தங்கள் ஓய்வுக்காலம், மகிழ்ச்சி நிறைந்ததாகவும், அமைதியானதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமைய வேண்டும் என்று நான் மனதார வாழ்த்துகிறேன். சமூகப் பணிகளிலும், தனிப்பட்ட ஆர்வங்களிலும் நீங்கள் ஈடுபட்டு, அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையைத் தொடர எனது ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. தங்கள் கல்விச் சேவைக்கு எமது சமுதாயம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

**கு. லங்காபிரதீபன்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**



## சிறந்த சேவையாளன்

மணிவிழாக்காணும் அதிபர் ந. பரமேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அவர் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்தபோது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து அவற்றை தனது ஆளுமையால் வெற்றி கண்டவர். கல்வித் திணைக்களத்துடன் நல்லுறவைப் பேணி வந்ததுடன் ஆசிரியர்களுக்கும், மாணவர் களக்கும் முன் மாதிரியாக இருந்து மாணவரின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்தவர்.

புகழ்பூத்த முன்னணிக் கல்லூரிகளில் பணியாற்றிய அனுபவம் இப் பாடசாலையை வளர்த்தெடுக்க அவருக்குப் பெரிதும் துணையாக இருந்தது. தனது சேவைக்காலத்தை திருப்தியுடன் நிறைவு செய்யும் அவரைப் பாராட்டுவதோடு அவர் தம் ஓய்வுக் காலம் குடும்பத்தினருடன் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**நடராஜா தெய்வேந்திராஜா,**
**ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் வலயம்.**




## தனித்துவம் மிக்க அதிபர்

திரு.ந.பரமேஸ்வரன் எமது பாடசாலையின் முதல்வராக இருந்த காலப்பகுதியில் மாணவர் கல்வி, ஒழுக்கம், இணைபாட செயற்பாடுகள் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தினார். மாணவ வளம், ஆசிரிய வளம், பௌதீக வளம் ஆகியவற்றைப் பெருக்கிக் கொள்வதிலும் ஆர்வமுடையவராகச் செயற்பட்டு வந்தார்.

ஆசிரியர், மாணவர், பழையமாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள், கல்வியதிகாரிகள் ஆகியோரது ஆதரவுடன் சிறந்த முறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரது ஓய்வுக் காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ காமாட்ஷி அம்மனைப் பிரார்த் திக்கின்றேன்.

S.T. **கிருஷ்ணகுமார்,**
**பழையமாணவன், ஓய்வு நிலை அதிபர்**



**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**
**அதிபர் திரு. ந.பரமேஸ்வரன் (SLPS 1)**
**(B.SC,P.G.D.E, M.ED, PGD in Edu,mgt**

சுயவிபரம்

**1.யா/சேர் வை.து.ம.ம வித்தியாலயம் (வேலணை)**
**ஆசிரியர், பிரதி அதிபர்**
**-1993.11.03 -2001.12.31**

**2. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**ஆசிரியர்**
**-2002.01.01 -2004.06.03**

**3. யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**ஆசிரியர்,பிரதி அதிபர்**
**- 2004.06.04- 2016.01.04**

**4. யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**
**ஆசிரியர், பிரதி அதிபர்**
**2016.01.05- 2016.09.04**

**5. யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்**
**அதிபர்**
**2016.09.05 - 2025.10.31**



## கடமையைக் கண்ணெனக் காத்தவர்

திரு.நடராசா பரமேஸ்வரன் யாழ். இந்துக் கல்லூரி நாட்களில் எங்களுடன் தோழமையுடன் பழகியவர். நாங்கள் வயது மூத்தவராக இருந்த போதும் எம்முடன் நட்புறவுடனும் தோழமையுடனும் பழகிய ஒருவர். யாழ். இந்துக் கல்லூரிக்கு இயல்பான ஆன்மிக ஆற்றல் ஆளுமையுடன் கல்விச் சேவையில் ஆசிரியராக, உப அதிபராக, பிரதி அதிபராக, அதிபராகப் பரிணமித்திருந்தார்.

குறிப்பாக யாழ் நகர பாடசாலையைப் பொறுத்த வரையில் பிரபல்யமான பாடசாலையின் பட்டியலின் கீழ் அதை அண்மித்த பாடசாலைகள் ஆல மரங்களின் கீழ் வளர்கின்ற நாணல்களைப் போன்றவை. வளங்கள் மற்றும் கற்றல் சூழல் சமூகப் பின்னணி என்பவை இந்தப் பிளவை மேலும் ஆளமாக்கும் காரணிகளாக இருக்கும்.

இவருடைய காலத்தில் பாடசாலை இருநூறாவது ஆண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி இருந்தது. ஒரு அம்சமாகும் மற்றும் பாடசாலைக்கான முன்வளைவு நிர்மாணிக்கப்பட்டதோடு பாடசாலை உள்வீதி புனரமைக்கப்பட்டது அவருடைய சேவைக்காலத்தின் சான்றாக மிளிர்கின்றது.

எனவே இவர்காலத்தில் இவர் ஆற்றிய சேவைக்காக இவரைப் பாராட்டுவதோடு இவரது ஓய்வுக் காலம் ஆயுள் ஆரோக்கியத்தோடு சமூக, சமய சேவைகளுக்கு பங்களிக்க வேண்டும் என மனதார வாழ்த்தி இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு. இ. இளங்கோவன்**
**பிரதம செயலாளர்- வட மாகாணம் (ஓய்வு நிலை)**



## சிறந்த நிர்வாகி

யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் கடந்த ஒன்பது வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி 01.11.2025 முதல் ஓய்வுபெறும் அதிபர் திரு.நடராசா பரமேஸ்வரன் அவர்களின் சேவை யைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். யாழ் இந்துவில் அறிமுகமாகி தீவகப்பகுதியில் என்னுடன் சமகாலத்தில் பணியாற்றினார். யாழ். இந்து, மானிப்பாய் இந்து என்பவற்றில் பிரதி அதிபராகச் சேவையாற்றியகாலத்தில் மாணவர் கல்வி அபிவிருத்திக்காக பல முயற்சிகளை மேற்கொண்டார்.

நெருக்கடியான காலகட்டத்தில் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையேற்று பாடசாலையின் பௌதீக வள விருத்திக்கும் மாணவர் கல்வி முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்டார். அமைதியானமுறையில் பாடசாலை நிர்வாகப் பணிகளை மேற்கொண்டார். உங்களின் கல்விப்பணியை வாழ்த்துவதுடன் எதிர்காலம் வளமாக அமைந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**பா. சண்முகானந்தன்,**
**பிரதிஅதிபர்,**
**யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.**



## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

அதிபர் சேவையில் பிரதி அதிபராக நியமனம் பெற்று, இப் பாடசாலையில் 2016 தொடக்கம் ஒன்பது வருடங்களாக அதிபராகப் பணியாற்றி, இன்றைய தினம் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.ந. பரமேஸ்வரன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அதிபராகப் பொறுப்பேற்றது முதல் நிர்வாகம், பாட அபிவிருத்தி, இணை பாடவிதானச் செயற்பாடுகள் எனப் பல விடயங்களில் கவனம் செலுத்தி பல சவால்களுக்கு மத்தியிலும் தேசிய மட்டம் வரை மாணவர்களைக் கொண்டு சென்ற பெருமை இவரைச் சாரும். எனவே இவரது அர்ப்பணிப்பான சேவையை வாழ்த்துவதோடு இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் இறைவனை வேண்டுகின்றேன்.

**வை. ஜெயச்சந்திரன்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,வட மாகாணம்.**



## துணிவு மிக்க அதிபர்

கல்வியில் கணித ஆசானாக ஈடில்லா கணித அறிவை ஏற்றமுடன் மாணவர்களுக்கு வழங்கி அதிபராகச் சொல்லுக்கும் செயலுக்கும் கடமையினின்று விலகாது பணியாற்றிய காலத்திலே இவ் வித்தியாலய அதிபராக 2016 முதல் 2025 வரையான காலத்தில் ஆசிரியர்களின் நலன் பேணி தோழமையுடன் இணைந்து பணியாற்றியதனால் உயர்ந்த பெறுபேறுகளையும் ஒழுக்கமிக்க மாணவர்களையும் தோற்றுவித்ததுடன் பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் செலுத்தும் பெற்றோர்கள் மற்றும் சிறந்த பாடசாலை முகாமைத்துவ, சமூகக் கட்டமைப்பை ஒன்றிணைப்பதில் பல தடைகளுக்கு மத்தியில் செயற்பட்டும் உச்ச ஆண்டுகளை எட்டியும் பாடசாலை வளர்ச்சிக்கு தன்னலம் கருதாது செயற்பட்ட நிறைவான செயல் திறன் மிக்க வல்லாளர்.கல்வியில் பேராற்றலராகவும் இறை பணியில் தொண்டராகவும் சமூகத்தில் வழிகாட்டாளராகவும் விளங்கும் இவர் அதிபர் சேவையில் ஓய்வு பெறினும் அவரது சேவைகள் தொடர்வதற்கும் நீண்ட ஆயுளுடன் வாழ தன் குடும்பம் மானிட சமூகம் உயர்வடைய ஆசிரியர் நலன்புரிக் கழகம் சார்பாக இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**பா. செந்தில்குமார்,**
**தலைவர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.**



## சாதனை அதிபருக்கு வாழ்த்துக்கள்

அதிபர் திரு.ந.பரமேஸ்வரன் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாகக் கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மிகவும் அமைதியான சுபாவமுடைய இவர் கல்வித் துறையில் நீண்ட நெடிய பயணத்தின் மிகச்சிறந்த போதனைகள் வழியாகவும் அதிகளவிலான மாணவர்களை உயர்நிலைக்கு இட்டுச்சென்றுள்ளார். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் வாழ்வதோடு பிறரையும் அவ்வாறு வாழ வைக்க வேண்டும் என்ற நியதிக்கமைவாகத் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

எமது பாடசாலையில் 2016 ஆம் ஆண்டு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் பல மாணவர்களின் சாதனைக்கு வழிகாட்டியாக விளங்கி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். சுற்றாடல் முன்னோடிக் குழு சாரணியம் போன்ற துறை களில் மாணவர்கள் ஜனாதிபதி விருது பெறுவதற்கும் காரணமாக விளங்கினார். பாடசாலையின் 200 ஆண்டு விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவரது காலத்தில் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கான அனுமதியை பெற்றிருந்தனர். பாடசாலையின் பௌதீக வளங்களிலும் அதிக அக்கறை கொண்டு விளங்கினார்.அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் அவர்தம் குடும்பத்தினருடன் வளமும் நலமும் பெற்றுவாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா. சந்தனேஸ்வரன்,**
**பழைய மாணவர் சங்கம்.**



## பெருமைக்குரிய அதிபர்

திரு. நடராஜா பரமேஸ்வரன் அவர்களி சேவை நலன் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

யா/ பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் ஒன்பது வருடங்களாக அதிபர் பதவியிலிருந்து மாணவர்களை சிறந்த முறையில் வழிநடத்தும் ஒருவராகவும், பாடசாலை யில் பலவகையான அபிவிருத்தி வேலைகளையும் சிறப்பாக நடாத்திய பெருமைக்குரியவர்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் மனைவி, பிள்ளைகள் உறவினர், சமூகத்தினருடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஆரோக்கியமான வாழ்வு வாழ வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி. ரமணன் விஜயவாணி,**
**செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

**பழைய மாணவர் சங்கம்,**
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**

(C-4223)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## உத்தரப் பிரதேசத்தில் படகு கவிழ்ந்து விபத்து!

- ஒருவர் உயிரிழப்பு
- 13 பேர் காயம்



(டில்லி)

இந்தியாவின், உத்தரப் பிரதேசத்தின் பஹ்ரைச்சில் படகு கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் சுமார் 8 பேர் வரை காணாமல்போயுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.


உத்தரப்பிரதேசத்தின் பஹ்ரைச் - பரதபூர் கிராமத்திற்கு அருகிலுள்ள கௌடியல் ஆற்றில், நேற்று முன்தினம் புதன் கிழமை குறித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தவிபத்தில் 60 வயதுடைய பெண் ஒருவரே நீரில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

லக்கிம்பூர் மாவட்டத்தின் கைரதியா கிராமத்தைச் சேர்ந்த 22 பேர் பரதபூருக்கு படகில் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீரோட்டம் அதிகமாக இருந்ததால் படகு ஆற்றில் கவிழ்ந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# வர்த்தகப் போருக்கு
# ட்ரம்ப் - ஜி ஜின்பி



**(சியோல்)**

**உலகின் இரண்டு பெரிய வாதார நாடுகளுக்கு வர்த்தகப் போர் நிறுத்தம் ஏற்ப நம்பிக்கையுடன், அமெரிக்க ஜ டொனால்ட் ட்ரம்ப் நேற்று கிழமை தென்கொரிய படைத்தளத்தில் சீனத்தலை ஜின்பிங்கை சந்தித்தார்.**

தெற்கு துறைமுக நகரமான பூசானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள், 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்களின் முதல் நேரடி சந்திப்பாகும்.

அத்துடன் இது தென் கொரியா, ஜப்பான் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் பல வர்த்தக முன்னேற்றங்களைப் பற்றிய ட்ரம்ப்பின் ஆசியா முழுவதும் மேற்கொள்ளும் விசேட பயணத்தின் இறுதிக் கட்டத்தையும் குறிக்கிறது.

சந்திப்பின் போது ஜியுடன் கைகுலுக்கிய ட்ரம்ப், நாங்கள் மிகவும் வெற்றிகரமான சந்திப்பை நடத்தப் போகிறோம், அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை, இன்று நாம் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாம் என்று தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அவர்கள் தங்கள் பிரதிநிதிகளுடன் அமர்ந்தபோது, உலகின் இரண்டு முன்னணி பொருளாதாரங்களுக்கு இடையில் அவ்வப்போது உரசல்கள் ஏற்படுவது இயல்பானது என்று ஜி ஜின்பிங் ட்ரம்பிடம் தெரிவித்தார்.

மேலும், சீனா - அமெரிக்க உறவுகளுக்கு உறுதியான அடித்தளத்தை அமைக்க ஜனாதிபதி ட்ரம்புடன் "தொடர்ந்து பணியாற்ற நான் தயாராக இருக்கிறேன்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன்பு, இரு நாடுகளுக்கான வர்த்தகப் பேச்சு வார்த்தையாளர்கள் ஒருவருக்கொருவர் முதன்மை கசப்பான விடயங்களை நிவர்த்தி செய்வதில் அடிப்படை ஒருமித்த கருத்தை எட்டினர்.

இந்த முன்னேற்றத்தினால், உலகளாவிய வணிகத்தை உலுக்கிய வர்த்தகப் பதற்றங்கள் தணியும் என்று முதலீட்டாளர்கள் நம்பியதால், டொலருக்கு எதிராக சீனாவின் யுவான் நாணயம் கிட்டத்தட்ட ஒரு வருட உச்சத்தை

## வெளிநாட்டவருக்கு வேலை அனுமதி வழங்குவதை நிறுத்திய அமெரிக்கா

(வோஷிங்டன்)


வெளிநாட்டவர்களின் வேலைக்கான அனுமதியை தானாக நீட்டிப்பு செய்யும் முறையை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது. இதன் காரணமாக, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு தடாலடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்தவகையில், அமெரிக்காவில் உள்ள நிறுவனங்கள் தங்கள் நாட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதில் அவர் திட்டவட்டமாக உள்ளார்.

இந்த நிலையில், வெளிநாட்டவர்கள் அமெரிக்காவில் தங்கி வேலை பார்ப்பதற்கான இஏடி எனப்படும் வேலைவாய்ப்பு அங்கீகார ஆவணங்களைத் தானாக நீட்டிக்கும் வசதியை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை வெளியிட்ட அறிக்கையில், "ஒக்டோபர்,30 மற்றும் அதற்கு பிறகு வேலைவாய்ப்பு அங்கீகார ஆவணங்களைப் புதுப்பிக்கக் கோரி விண்ணப்பிப்பவர்களுக்கு, இனி தானியங்கி மூலம் நீட்டிப்பு வழங்கப்படாது.

பொதுமக்கள் மற்றும் தேசிய பாதுகாப்பைக் காக்கும் விதமாக, மேலாண்மை மற்றும் தணிக்கையை அரசு முன்னுரிமையாகக் கொண்டுள்ளது," என தெரிவித்



துள்ளது.

வெளிநாட்டவர்கள் தங்கள் வேலைக்கான அனுமதிக் காலம் முடிந்த பின்னரும், கூடுதலாக 540 நாட்கள் அமெரிக்காவில் பணியாற்ற, முந்தைய பைடன் அரசு நிர்வாகம் அனுமதியளித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த மத்தியிலும்
# ...ங் சந்திப்பு!



...ரிய பொரு
இடையே
...படும் என்ற
ஜனாதிபதி
... வியாழக்
விமானப்
...லைவர் ஜி

எட்டியது.

வால் ஸ்ட்ரீட் முதல் டோக்கியோ வரையிலான உலகப் பங்குச் சந்தைகள் அண்மைய நாட்களில் சாதனை உச்சத்தை எட்டியுள்ளன.

ஆனால் இரு நாடுகளும் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் போட்டித் துறைகளில் கடுமையாக விளையாடத் தயாராக இருப்பதால், எந்தவொரு வர்த்தகத் தடையும் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்து பல கேள்விகள் உள்ளன.

சீனா ஆதிக்கம் செலுத்தும் துறையான உயர் தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கு அவசியமான அரிய - பூமி தாதுக்களின் ஏற்றுமதியில் பீஜிங் வியத்தகு முறையில் கட்டுப்பாடுகளை விரிவுபடுத்த முன்மொழிந்ததைத் தொடர்ந்து இந்த மாதம் வர்த்தகப் போர் மீண்டும் தொடங்கியது.

"சீன ஏற்றுமதிகள் மீது கூடுதலாக 100% வரிகள் விதிப்பதன் மூலம் பதிலடி கொடுப்பதாகவும், அமெரிக்க மென்பொருளைப் பயன்படுத்தி சீனாவுக்கான ஏற்றுமதிகளில் தடைகள் விதிக்கப்படுவது உள்ளிட்ட பிற நடவடிக்கைகள் உலகப் பொருளாதாரத்தையே தலைகீழாக மாற்றியிருக்கக்கூடும் என்றும் ட்ரம்ப் சபதம் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

தற்போது, அந்த நடைமுறைக்கு மாற்றாக, இந்த அறிவிப்பு அமைந்துள்ளது.


ட்ரம்ப் அரசின் இந்த உத்தரவால், வெளிநாட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, அங்கு பெருமளவில் பணியாற்றும் இந்தியர்களுக்கே பாதிப்பு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



## 33 ஆண்டுகளுக்குப் பிறகு அணு ஆயுத சோதனை

### ட்ரம்ப் அதிரடி உத்தரவு



(வோஷிங்டன்)

அமெரிக்கா மற்றறைய நாடுகளைவிட அதிக அளவில் அணு ஆயுதங்களை வைத்துள்ளது.

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையில் ரஷ்யா இரண்டாமிடத்தில் இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பிற நாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், சீனப் பொருட்களுக்கு எதிராக கூடுதல் வரி விதித்தார்.

இதனால் அமெரிக்கா - சீனா இடையே சலசலப்பு ஏற்பட்டுவந்தது.

இந்த நிலையில், தென் கொரியாவின் புசான் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அணு ஆயுத சோதனையை மீண்டும் தொடங்குமாறு அமெரிக்க இராணுவத்திற்கு ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

1992 ஆம் ஆண்டுக்கு பிறகு அதாவது 33 ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக அமெரிக்கா அணு ஆயுத சோதனையை மேற்கொள்ளவுள்ளது.

இதனிடையே ட்ரம்ப் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அமெரிக்கா மற்ற எந்த நாட்டையும் விட அதிக அளவில் அணு ஆயுதங்களை வைத்துள்ளது.

என்னுடைய முதல் ஆட்சிக்காலத்தில் ஆயுதங்களை புதுப்பித்ததால் இது சாத்தியமானது

அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில் ரஷ்யா இரண்டாமிடத்திலும், சீனா மூன்றாம் இடத்திலும் இருக்கிறது.

ஆனால் இன்னொரு 5 ஆண்டுகளில் சீனாவிடமும் சரிசமமான ஆயுதங்கள் இருக்கும்

மற்ற நாடுகளின் பரிசோதனை திட்டங்களை கருத்தில் கொண்டு. நம்முடைய அணு ஆயுதங்களை சம அளவில் பரிசோதிக்க 'Department of War'க்கு வழங்குகிறேன். இது உடனடியாக தொடங்கும்" என்று தெரிவித்துள்ளார். (நி)

## "மோடி மிகவும் நல்லவர்" புகழ்ந்து தள்ளும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக தென் கொரியாவின் கியோங்ஜு"வில் நடைபெற்ற ஆசிய - பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் "நான் இந்தியாவுடன் ஒரு வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போகிறேன்.

உங்களுக்குத் தெரியும், பிரதமர் மோடி மீது எனக்கு மிகுந்த மரியாதையும் அன்பும் உண்டு.

எங்களுக்கு ஒரு சிறந்த உறவு இருக்கிறது.

பிரதமர் மோடி மிகவும் நல்ல மனிதர்.

ஆனால் சற்று கடினமானவர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போரின் போது, நீங்கள் பாகிஸ்தானுடன் போரைத் தொடங்கினால், நாங்கள் உங்களுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்யமாட்டோம் என்று கூறினேன்.


நான் சொன்ன இரண்டு நாட்களுக்குள், மோடியும், ஷெரீபும் என்னிடம் பேசி போரை நிறுத்தினர்" என்று தெரிவித்தார்.

மேலும் இந்தப் போரில் 7 புத்தம் புதிய போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ட்ரம்ப் தெரிவித்தார்.

ஆனால் அது இந்தியாவின் போர் விமானமா? பாகிஸ்தானின் போர் விமானமா? என்று குறிப்பிடவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அதிகரித்து வரும் வாடகை கொலையாளிகள்



(கொழும்பு)

இலங்கையில் வாடகைக் கொலையாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக அண்மையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஒரு தொகை பணத்திற்காக படுகொலைகளை மேற்கொள்வோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமானத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின் போது குறித்த பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் துப்பாக்கிதாரிகளுக்கும் எவ்வித தொடர்புகளும் கிடையாது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

படுகொலை ஒன்றை மேற்கொள்வதற்கு நான்கு முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வரை அறவீடு செய்யப்படுவதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் வெறும் போதைப்பொருட்களுக்கு மட்டும் கூட படுகொலைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையில் நாடு முழுவதும் சுமார் 100இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் இதில் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக போதைப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள் இவ்வாறான குற்றச்செயல்களுக்குத் தூண்டப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் ஒப்பந்தத் தொகையாக 15 இலட்சம் ரூபாய் பேசப்பட்டதாகவும், கணேமுல்ல சஞ்ஜீவ படுகொலையின் போது ஒப்பந்த தொகையாக 1.5 கோடி ரூபாய் ஒப்பந்தமாக பேசப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி-பா-17
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MSc, Engineer
எதிர் பார்ப்பு: தகுதியான பெண் (Australia)
தொ.இ: B/15622

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L,Business
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/15623

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:பூராடம்
8 இல் சூரி செவ்
கி-பா: 57
உயரம்:6'2"
தகைமை/தொழில்:BSc, QS
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15625

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி-பா:43
உயரம்:5'
தகைமை/தொழில்-QS(PVT)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/15626

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்- உத்தரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Building Contractor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15918

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: சதயம்
7 இல் செவ்
கி-பா: 18
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Project Manager
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, பட்டதாரி
தொ.இ: G/15648

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
கி-பா: 12
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, HRM(PVT)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/15652

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-கேட்டை
கி.பா -55
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15654

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:சுவாதி
2 இல் செவ்
கி.பா - 21
உயரம்: 5'3"
தகைமை/தொழில் - MBBS(Final year)
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/15655

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
8 இல் சூரி செவ்
கி.பா - 64
உயரம்: 5'8"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,
தொ.இ: G/15657

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 474

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



## அழுவது நல்லது!

ஒருவருக்கு அழ வேண்டும் போல இருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே தனியாக ஒரு இடத்திலே உட்கார்ந்து அழ ஆரம்பித்து விடலாம்!

அவருக்கே சிரிக்க வேண்டும் போல இருக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே தனியாக உட்கார்ந்து சிரிக்க ஆரம்பித்து விடக்கூடாது! பார்க்கிறவர்கள் சந்தேகப்படுவார்கள்.

நல்லாத்தானே இருந்தான். இன்றைக்கு இப்படி உட்கார்ந்து சிரிக்கிறானே என்று யோசிப்பார்கள்!

ஆனால் எப்படி இருந்தாலும்.

வாய்விட்டுச் சிரிக்கிறது எப்படி உடம்புக்கு நல்லதோ அதுமாதிரியே வாய்விட்டு அழுவதும் உடம்புக்கு நல்லது தானாம்!

உளவியல் வல்லுநர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்?

பொதுவாக நாம் என்ன நினைக்கின்றோம்

அழுவது கோழைத்தனத்தின் அடையாளம் என்று நினைக்கின்றோம். அதுமட்டுமில்லை. ஆண்கள் அழுதால் அது அவர்களுக்கு கேவலம் என்று வேறு நினைக்கின்றோம்.

காலங் காலமாகப் பரப்பப்பட்டு வரும் ஒரு தவறான நம்பிக்கை இது என்று உளவியல் வல்லுனர்கள் சொல்கிறார்கள்.

வயிற்றுக்குத் தேவையில்லாத பொருள் வாந்தியாக வெளியிலே வந்துவிடுகிறது. அதுமாதிரி மனதுக்குத் தேவையில்லாத ஒன்று அழுகையாக வெளியிலே வருகிறது அவ்வளவுதான்!

மனதுக்குள்ளே அடக்கமுடியாத அதிர்ச்சிகள் சேரும்போது அது அழுகையாக வந்துவிடுகிறது.

அது மகிழ்ச்சியான அதிர்ச்சியாக இருந்தாலும் சரி! அடக்க முடியாத அதிர்ச்சிகளை வெளியே கொட்டிவிடு சிறு முயற்சிதான் அழுகை!

வாய்விட்டு அழுது உணர்ச்சிகள் வெளியே போய்விட்டால். மனச்சுமை குறைந்துவிடுகிறது!

ஆண் - பெண் எல்லோருக்குமே இது பொருந்தும். உண்மையிலேயே உணர்ச்சிகளை அடக்கி வைக்க முயற்சி செய்தால் அதனாலே பல தீய விளைவுகள் உண்டாகக்கூடிய வாய்ப்பு உண்டு.

அதனாலே.

வாய்விட்டுச் சிரிக்கிறது மாதிரி வாய்விட்டு அழுதுவிட வேண்டும்! அதுதான் நல்லது!

ஆனால் அப்படி அழுதால் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. அதனாலே தனியாக உட்கார்ந்து அழுதுவிட்டு பின்பு கண்ணைத் துடைத்துக்கொண்டு வந்துவிடலாம்.

நிபுணர்கள் இப்படி சொல்லிவிட்டார்களே என்பதற்காக எது கொடுத்தாலும் முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு அழுவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை.

எப்போதாவது அதிர்ச்சியான செய்தி கிடைக்கின்ற போது அழுது அந்த மன அழுத்த நிலையிலேயிருந்து தப்பிக்கலாம். அதோடு விட்டுவிடவேண்டும். அதுதான் நல்லது!

இருந்தாலும் அழுகையிலே எத்தனையோ ரகம் உண்டு.

ஓர் இளைஞன் அழுதுகொண்டிருந்தான். “ஏம்பா அழுகிறாய்?” என்று கேட்டார் ஒருவர்.

“எங்கள் தாத்தா இறந்துவிட்டார்.” என்றான்.

“உங்கள் தாத்தாவுக்கு என்ன வயது?” என்றார். 95 என்றான்.

“அதுதான் - முழுதாக வாழ்ந்துவிட்டுத்தானே போய் இருக்கிறார். இதற்குப் போய் அழுதுகொண்டு இருக்கிறியே!” என்றார். “நான் அவர் இறந்து போனதற்காக அழவில்லை சார்.

எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலேயிருந்து இன்றைக்கு அவருக்கு இன்டர்வியூ கார்டு வந்து இருக்கு..

அதை கண்ணாலே பார்க்க அவருக்கு கொடுத்து வைக்கவில்லையே. அதை நினைத்து அழுகிறேன்!” என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தமிழ் பொறுப்பதிகாரி நியமனம்



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு தமிழ்மொழி பேசக்கூடிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் கிளிநொச்சி மக்கள் தங்களுடைய முறைப்பாடுகளை இனி தாய்மொழியில் நேரடியாக முன்வைக்கலாம்.

தமிழ் பிரதேசங்களில் தமிழ் அதிகாரிகளை நியமிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந் நியமனம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பொறுப்பதிகாரியாக எம். சுல்தான் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார். (8-316)

# தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைமைச் செயலகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

- எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் இல:58, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் குறித்த அலுவலகம் அக் கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அக்கட்சியின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் அழைப்பு விடுத்துள்ளார். (8-33)


# கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச கலாசார அதிகார சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் கலை இலக்கிய விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.01.45 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசார அதிகார சபைத் தலைவரும் பிரதேச செயலாளருமான குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் சீரணி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை, பொது வைத்திய நிபுணர் வைத்தியர் சிவபாலன் சிவன் சுதன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் சிற்ப, சித்திரக் கலைஞர் கலாபூஷணம் சுப்பிரமணியம் பத்மநாதன், நாடகக் கலைஞர் கலாபூஷணம் செல்லையா உதயச்சந்திரன், வர்த்தகர் அந்தோனிப்பிள்ளை சூரியகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் வருகைதரவுள்ளனர். (3-33)


## கண்ணீர் அஞ்சலி



மண்மகிழ 08 - 09 - 1964

கண்நெகிழ 30 - 10 - 2025

எமது பாடசாலையின் முன்னாள் உதவி அதிபர் அமரர். திரு. வல்லிபுரம் நவலோகநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !!ஓம் சாந்தி!!!

[C-4220]

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும் : அதிபர்,ஆசிரியர்கள்,கல்விசாரா உத்தியோகத்தர்கள்
யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3336

**கவிசா**

டாக்டர் எதிர் வீட்டுல இருக்குறவரு புது கார் வாங்கியிருக்காங்க... அதை ஏன் என்கிட்டே சொல்றீங்க..?



நீங்க தானே வயித்தெரிச்சல் இருந்தா சொல்ல சொன்னீங்க...


**மிதுளா**

டேய் டாக்டர் செலவு மட்டும் மாதம் இரண்டாயிரம் ஆகுதடா...



அவரோட செலவை எல்லாம் நீங்க எதுக்கு அண்ணே செய்யிறீங்க?

**ரஞ்சினி**




**விவேகன்**

சிறுவயதில் அம்மா- அப்பா திருமண ஆல்பத்தைப் பார்க்கும்போது...




இரண்டு பேர் மட்டும் தான் இருக்கிறீங்க நான் எங்க...

**தனோஜ்**

1 ஆம் திகதி பொறந்தா வாடகை தரனும்ன்னு தெரியாதா?



நான் பத்தாம் திகதி பொறந்தவன்யா

**மிதுளன்**

வருங்காலத்தில் இப்படியும் எச்சரிக்கை பலகை வரலாம்



இங்கு தொலைபேசி நபர்கள் உலா வருகிறார்கள் வாகன ஓட்டிகள் மெதுவாக செல்லவும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 898





நான் செய்திருக்கும் எத்தனையோ பாவங்களுக்கு மத்தியில் ஏதோ புண்ணியமும் செய்திருக்கிறேன். ஆகையினால் தான் இவளை என் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றேன்!" என்றார் சக்கரவர்த்தி.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சக்கரவர்த்திக்கு அருகில் கட்டிலில் வீற்றிருந்த வானமாதேவிக்கு விம்மலுடன் அழுகை வந்து விட்டது. அவள் உடனே எழுந்து அடுத்த அறைக்குச் சென்றாள்.

"மன்னர் மன்னா! மலையமான் மகளைப் பற்றித் தாங்கள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். அவருடைய திருவயிற்றில் பிறந்த மக்களும் தங்களிடம் இணையற்ற பக்தி விசுவாசம் கொண்டிருக்கிறார்கள்."

ஆனாலும் என் வார்த்தையை அவர்கள் மதிப்பதில்லை. என் கட்டளைக்கும் கீழ்ப்படிவதில்லை. எனக்குத் தெரியாமல் ஏதேதோ, செய்கிறார்கள். நீரும் அவர்களோடு சேர்ந்து கொள்கிறீர்! அருள்மொழிவர்மன் கடலிலிருந்து தப்பிப் பிழைத்து நாகைப்பட்டினம் புத்த விஹாரத்திலிருப்பது உமக்கு முன்னமே தெரியும் அல்லவா? ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"மன்னிக்க வேண்டும் பிரபு! அந்த விவரம் நேற்று வரையில் எனக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கவில்லை. இளவரசரின் உயிருக்கு ஆபத்து நேரிட்டிராது என்று மட்டும் உறுதியாயிருந்தேன். அவர் பிறந்த வேளையைக் குறித்துச் சோதிடக்காரர்கள் எல்லோரும் கூறியிருப்பது பொய்யாகி விடாதல்லவா?"

"முதன்மந்திரி! சோதிட சாஸ்திரத்தினால் நேரக் கூடிய தீங்குகளுக்கு அளவே இல்லை. இந்த இராஜ்யத்திலிருந்து சோதிடக்காரர்கள் எல்லாரையுமே அப்புறப்படுத்திவிட எண்ணுகிறேன். அருள்மொழியின் ஜாதகத்தைக் குறித்து சோதிடக்காரர்கள் கூறியிருப்பதை வைத்துக் கொண்டு தான் நான் உயிரோடிருக்கும் போதே அவனைச் சிம்மாசனத்தில் ஏற்றி விடுவதற்கு எல்லாரும் பிரயத்தனப்படுகிறார்கள் நீரும் அவர்களைச் சேர்ந்தவர்தானே?"

"சத்தியமாக இல்லை பிரபு! அதற்கு மாறாக, சின்ன இளவரசர் சிறிது காலத்துக்கு இந்தச் சோழ நாட்டுக்குள் வராமலிருந்தாலே நல்லது என்று எண்ணினேன். இலங்கைக்குப் போயிருந்தபோது இளவரசரிடம் அவ்விதமே சொல்லி விட்டு வந்தேன். ஆனால் நான் இப்பால் வந்தவுடன் பழுவேட்டரையர்களின் ஆட்கள் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வர இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். தாங்களும் அதற்குச் சம்மதம் அளித்திருக்கிறீர்கள். இந்தச் செய்தி நாடு நகரமெல்லாம் பரவியிருக்கிறபடியால், ஜனங்கள் பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். அவர்கள் தான் இளவரசரை ஏற்றி வந்த கப்பலை வேண்டுமென்று கடலில் மூழ்கடித்து விட்டதாக ஜனங்களிடையில் பேச்சாயிருக்கிறது."

"பொய், முதன்மந்திரி! பொய்! எல்லாம் முழுப் பொய்! பார்த்திபேந்திர பல்லவன் எல்லாம் என்னிடம் கூறிவிட்டான். பழுவேட்டரையர்கள் அனுப்பிய கப்பலில் இளவரசன் வரவில்லை. பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்தான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வருமுன் காப்போம்



தேரிக்குடியிருப்பு என்ற ஊரின் எல்லையில் இருந்த காட்டில் பெரிய குளம் இருந்தது, அதனை ஒட்டி சிறிய நீரோடை ஓடிக் கொண்டிருக்கும். அந்த குளத்தில் நிறைய மீன்கள், நண்டுகள், மற்றும் அனைத்து நீர்வாழ் இனங்கள் வாழ்ந்து வந்தன. அவற்றில் ராமு, சோமு, தாமு என்ற மூன்று மீன்கள் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். அந்த மூவரும் எங்கே சென்றாலும் ஒன்றாகவே போவார்கள். ஒரு பயமும் இல்லாமல் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் மகிழ்ச்சியை கெடுக்கும் விதமாக ஒரு நாள் மாலையில் இரண்டு மனிதர்கள் அங்கே வந்தார்கள், வேட்டையாடிய களைப்பு முகத்தில் தெரிந்தது, குளத்து நீரை அருந்தி விட்டு, குளத்தை நன்றாக ஆராய்ந்தார்கள், பின்னர் அவர்களில் ஒருவர் "இந்த குளத்தில் நிறைய மீன்கள் இருக்கிறதே, அதுவும் நன்றாக வளர்ந்து கொழு கொழு என்று இருக்கிறதே, நாம் வீணாகக் காடு மேடு என்று அலைந்து வேட்டையாட வேண்டாம், பேசாமல் இங்கே நாளை வந்து வலையை விரிப்போம், மாட்டிக் கொள்ளும் மீன்களை விற்று பணம் சம்பாதிக்கலாம்" என்றார். மற்றவரும் "ஆகா, அருமையான யோசனையாக இருக்கிறதே" என்றார்.

இவர்கள் பேசுவதை கேட்ட ராமு என்ற மீன் பெருங்கவலை அடைந்தது, உடனே தன் நண்பர்களான சோமு, தாமுவிடம் கூறியது. காட்டின் நடுவில் இருந்ததால் இதுவரை பெரிய ஆபத்து வந்தது இல்லை, குளத்தில் நடுவில் போய் இருந்தால் பறவைகள் கூட தங்களை ஒன்றும் செய்தது இல்லை, இன்றோ இந்த மனிதர்களால் பெரிய ஆபத்து வந்து விட்டதே என்ன செய்யலாம் என்று யோசித்தன.

ராமு எப்போவும் வரும் முன் காத்துக் கொள்ளும் மனம் படைத்த மீன், மற்ற மீன்களைப் பார்த்து, நாளை கண்டிப்பாக அவர்கள் இங்கே வருவார்கள், நாம் இன்று இரவே இக்குளத்தை விட்டு நீரோடையின் உதவியால் அருகில் இருக்கும் வேறு குளத்திற்கு போகலாம். சில காலம் போன பின்பு மீண்டும் இங்கே வரலாம் என்றது.

ராமுவின் நல்ல யோசனையை மற்ற இருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் சும்மா சொல்லி விட்டு போயிருப்பார்கள், அவர்களாவது நம்மை பிடிப்பதாவது, நீ வீணாக பயப்படுகிறாய் என்றன.

ராமு எவ்வளவோ சொல்லிப் பார்த்தது, ஆனால் சோமு, தாமு இருவரும் கேட்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> என்றும் நினைவில் கொள் மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக் கூடாது.
>
> *~ கார்ல் மார்க்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெஞ்சு பொறுக்குதில்லையே நிலை கெட்ட ஏமாற்றை நினைத்தால்…

ஏமாறாதே ஏமாற்றாதே என்ற திரைப்படப் பாடல் ஒரு காலத்தில் அனைவரது நாவிலும் உச்சரிக்கப்பட்டது. அந்தளவுக்கு அறிவியலும் அறமும் சார்ந்த பாடலாக அது விளங்கியது.

இப்போதெல்லாம் அத்தகைய பாடல்களுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளதென்பதோடு அஃது ஒருபுறமிருக்க, நம் மண்ணில் நாளாந்தம் ஏமாற்று வேலைகள் தொடர்ந்து கொண்டிருப்பதை அறியும்போதுதான் வேதனை நெஞ்சை அடைக்கிறது.

ஆம், நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைத்துவிட்டால், என்று பாடுகின்ற பாரதியின் மனநிலையை ஒரு கணம் எண்ணிப் பார்க்கின்றோம்.

பாரதி சுய கவலையின்பால் அந்தப் பாடலை ஆக்கவில்லை. மாறாக பொது நிலையில் நின்று தனது மனவருத்தத்தை வெளிப்படுத்துகின்றான்.

இங்குதான் அத்தகையதொரு மனநிலை நம்மில் பலரிடம் ஏற்பட்டுள்ளது.

ஆம், தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி உங்களுக்குப் பணப் பரிசு கிடைத்துள்ளது எனக்கூறி, ஏமாற்று வேலைகள் நடந்தாகின்றன.

நிதி மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அதிலிருந்து பணப் பரிசு கிடைத்துள்ளதாகக் கூறி வங்கிக் கணக்கிலக்கம் உள்ளிட்ட தேவையான தகவல்களைப் பெற்று நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன.

இத்தகைய நிதி மோசடிகளுக்குப் பலர் ஆளாகியுள்ளனர். எனினும் சிலர் கௌரவத்தின்பால் அவற்றை மறைப்புச் செய்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, இன்னும் சில ஏமாற்றுப் பேர்வழிகள் ஏழைக் குடும்பங்களுக்குத் தொலைபேசி அழைப்புகளை எடுத்து, நிதி உதவி செய்வது போல கதைத்து இலாபகமாக அவர்களிடமிருந்து பத்தாயிரம் பதினையாயிரம் ரூபாய் எனப் பறித்துக் கொள்கின்றனர்.

என்ன செய்வது ஏழை மக்களின் தலையில் மண்ணைக் கொட்டுகின்ற மாபாதகத்தைச் செய்யுமளவுக்கு நம் மண்ணில் நயவஞ்சகர்கள் மலிந்துவிட்டனர்.

இதைக் கூறும்போது, ஏமாறுகின்றவர்களின் மனநிலை ~ அவர்களின் சமூகத் தொடர்பாடல் ~ சமகால யதார்த்த நிலைமைகள் பற்றிய அவர்களின் உள்வாங்கல்கள் மிகவும் மந்தமாக இருக்கிறது என்பதை உணர முடிகிறது.

தொலைபேசி அழைப்புகள் மூலமாக வங்கித் தவல்களைப் பெற்றுப் பண மோசடிகள் இடம் பெறுவது பற்றிய செய்திகள் ~ அறிவிப்புகள் ~ எச்சரிக்கைகள் எங்கும் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றபோதிலும் அவை பற்றி இம்மியும் கருசனை கொள்ளாமல் ~ மற்றவர்களுடனும் கலந்துரையாடாமல் அநாமதேய தொலைபேசி அழைப்பை நம்பி; உள்ள தகவல்களையெல்லாம் கொடுப்பதென்பது சாதாரண விடயமல்ல.

அவ்வாறான நிலைமை ஏற்படுகிறதெனில், அதற்கு அதிர்ஷ்டத்தின் மீதான நம்பிக்கையும் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற்றுவிட வேண்டுமென்ற ஆசையுமே காரணமாகின்றது.

ஆம், எங்கே தொலைபேசி அழைப்பில் அவர்கள் கூறிய தொகையை இழந்துவிடுவோமோ என்ற பதற்றமானது சம்பவத்தை எவருடனும் பகிராமல் சுயமாக முடிவுகளை எடுத்து, இருப்பதையும் இழக்க வேண்டி வருகிறது.

எனவே இனியேனும் ஏமாற்றுதாரர்களின் ஆசை வார்த்தையில் அகப்படாமல் விழிப்பாக இருந்து பணத்தையும் இழக்காமல் பார்த்துக் கொள்வோம்.

# பெரிய வெங்காயத்துக்கு விசித்திர நிபந்தனைகள்

## சஜித் காட்டம்

(கொழும்பு)

பெரிய வெங்காயத்தைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் விசித்திரமான நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

அரசாங்கம் ஏமாற்று அரசியலை நிறுத்தி, பெரிய வெங்காய விவசாயியைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது விசேட அறிக்கையொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டில் பெரிய வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களைத் தற்போதைய அரசாங்கத்திற்கு தொடர்ந்து முன்வைத்த போதிலும் எந்த நடைமுறை ரீதியிலான ஏற்பாடுகளும் இல்லாமல், பெரிய வெங்காயத்தை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் விசித்திரமான நிபந்தனைகளை விதித்துள்ளது.

இங்கு அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படும் பெரிய வெங்காயத்தில் ஒரு கிலோவில் 8 வெங்காயங்கள் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வெங்காயமும் 125 கிராம் எடை கொண்டனவாகவும், பெரிய வெங்காயத்தின் விட்டம் கொண்டதாகவும் அமைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் அரசாங்கம் விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகளை பெரிய வெங்காயச் செய்கை விவசாயிகளிடமிருந்து அதனைக் கொள்வனவு செய்வதைக் குறைப்பதற்கான தந்திரமாகவே நாம் பார்க்கிறோம்.

எனவே, பெரிய வெங்காயச் செய்கை விவசாயிகளுக்கு உடனடியாக நீதியை நிலைநாட்டுங்கள்.

அவர்களைக் கைவிடும் கொள்கைகளை நிறுத்தி, அவர்கள் தமது சொந்தக் காலில் வாழும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுங்கள் என்றார். (ந-7)

## மட்டு.தேர்தல் திணைக்களத்தில் அரச உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு நகரில் உள்ள மாவட்டத் தேர்தல் திணைக்கள அலுவலகத்தின் விடுதியிலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டவர் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எருவில் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், தேர்தல் திணைக்களத்திலுள்ள விடுதியில் தங்கியிருந்து கடமையாற்றி வந்த நிலையிலேயே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன் நீதிவான் நீதிமன்ற அறிவுறுத்தலுக்கமைவாக சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ந-7)

## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகளில் பாரப்படுத்தப்பட்டுள்ள, பின்வரும் உந்துருளிகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவை அரசுடமையாக்கப்பட்டு, அவற்றைப் பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு மன்று தீர்மானித்துள்ளது.

கீழே பட்டியலிடப்பட்டுள்ள உந்துருளிகள் தொடர்பில், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் பிரிவு 431(2) இன் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக, இவ்வறிவித்தல் இறுதியாக வழங்கப்படுகின்றது.

எனவே, கீழே இலக்கமிடப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில், எவருக்கேனும் உரிமைக்கோரிக்கை இருப்பின், உரிய ஆவணங்களுடன் நீதிமன்றப் பதிவாளரை, 2025.11.07ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு, இத்தால் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

ஏதேனும் உரிமைக் கோரிக்கைகள் நீதிமன்றிற்குக் கிடைக்கப்பெறாவிடின், அவை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என, மன்றினால் கட்டளையிடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

### உந்துருளிகள் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| BFV 9282 | JQ 5002 | BIC 2060 | BCG 8385 | WB 1735 |
| JP 5750 | VS 0264 | BIV 9015 | BGF 9187 | XV 5621 |
| BHR 3595 | JY 6057 | BBW 3846 | WJ 7400 | BDX 0236 |
| XK 2487 | VH 6088 | JA 3420 | MF 7985 | TF 3071 |
| UH 0901 | UB 1409 | BDD 9954 | BCV 2852 | MC 6469 |
| HH 0469 | XZ 5649 | UW 4797 | BGA 0949 | BDK 7632 |
| JC 3974 | TK 2756 | BFK 5869 | HG 0378 | VW 1203 |
| BGT 4311 | HJ 2979 | BCM 5736 | BHH 6799 | BBM 4295 |
| JS 8350 | GS 6703 | XG 5174 | 157-5725 | JG 9946 |
| JL 6275 | WR 3220 | HB 7480 | BIR 3595 | WC 8577 |
| MT 4892 | WS 6891 | BIM 8677 | BEZ 8869 | MB 4715 |
| [illegible] | BHA 3787 | MF 2291 | TA1313 | BBD 1344 |
| HX 2397 | BDY 6308 | XB 7067 | | |

## நன்னீர் மீன் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நன்னீர் மீன்பிடி அலகின் ஏற்பாட்டில் நன்னீர் உற்பத்தி மற்றும் பெறுமதி சேர் உணவு வகைகளின் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்வானது நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை என இரு தினங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் நன்னீர் மீன்களின் பெறுமதி சேர் உணவு வகைகள், அம்மாச்சி உணவுத் தயாரிப்புகள், உள்ளூர் உற்பத்தியாளர்களான கற்பகம், ஜசுபி, தொழிற்துறைத் திணைக்களம், சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு ஆகியோரின் உற்பத்திப் பொருட்கள் மற்றும் மீன்பிடித்துறை யாழ்.பல்கலைக் கழகம், தேசிய நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபை, சுற்றுலாப் பணியகம் - வட மாகாணம் ஆகியோரின் காட்சிப்படுத்தல்களும் இடம்பெறவுள்ளன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதி...

நேற்று (30) முற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டு அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் உயிரைப் பறித்து, நாட்டின் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் அழிக்கும் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ள போதைப் பொருள் வர்த்தகத்திற்கு இனிமேலும் இடமளிக்க எமது அரசாங்கம் தயாராக இல்லை என்று கூறிய ஜனாதிபதி, அனைத்துத் துறைகளையும் ஒன்றிணைத்து, "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாடு பன்முகத் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

போதைப்பொருள் அச்சுறுத்தல் இயற்கையாக உருவாகவில்லை. அது நீண்ட காலமாக அரசியல்வாதிகள் மற்றும் சில அரச அதிகாரிகளின் ஆசீர்வாதத்துடன் உருவாக்கப்பட்டது. அரசியல் நிழலின் கீழ் போலியான ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொள்வதற்கு குற்றவாளிகளுக்கு இருந்த வாய்ப்பை தற்போதைய அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.

இந்த வர்த்தகத்தில் ஈடுபட்ட எவருக்கும் இனி ஒளிந்து கொள்ள வாய்ப்பு இருக்காது என்று ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படும் இதற்காக அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து தேசிய செயற்பாட்டு மையத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நாட்டில் போதைப்பொருள் பரவல் ஒரு தேசிய பேரழிவாக மாறியுள்ளதுடன், பல குற்றங்கள் போதைப் பொருள் வர்த்தகத்தை மையமாகக் கொண்டு நடப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. திறமையாக முடிவெடுக்கும் பொறிமுறை மற்றும் பரந்த பொதுமக்கள் பங்கேற்புடன் கூடிய தேசிய அளவிலான வேலைத் திட்டத்தின் மூலம் இந்த அச்சுறுத்தலை ஒழிக்க வேண்டும் என்பதை அரசாங்கம் தற்போது இனங்கண்டுள்ளதுடன், இந்த தேசிய இலக்கை அடைய "முழு நாடுமே ஒன்றாக" தேசிய பணியை செயற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், பரந்த விளம்பரச் செயன்முறை மூலம் இந்த அச்சுறுத்தல் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய வலையமைப்பை துண்டித்தல், புனர்வாழ்வு வாய்ப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் போதைப் பொருள் பாவனையை கைவிட விரும்புவோருக்கு வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவை எதிர்பார்க்கப்படுகின்றன.

எமது நாட்டை ஆக்கிரமித்துள்ள பேரழிவை தோற்கடிப்பதற்காக இன்று அனைவரும் ஒன்று திரண்டிருக்கிறோம். இந்தப் பேரழிவு எந்தளவு ஆழமானது மற்றும் நாசகரமானது என நாம் அறிவோம். எமது பிள்ளைகள் எமது சமூகம் என்பன இந்த மாயப் பேரழிவிற்கு இரையாகி வருகிறது. இது தற்பொழுது உருவானதொன்றல்ல. பல தசாப்தங்களாக வளர்ந்து இந்தப் பேரழிவு முழு சமூகத்திற்குள்ளும் புரையோடி பீதியை உண்டாக்கியுள்ளது.

இந்தப் பயணத்தில் எமக்குத் தெரிவு செய்யக் கூடிய இரு பாதைகள் தான் உள்ளன. முதலாவது முன்னரைப் போன்றே இதற்கு இடமளித்து கண்டு கொள்ளாமல் இருப்பது. இரண்டாவது இதற்கு எதிராகப் போராடுவது. நானும் எனது அரசாங்கமும் இந்தப் பேரழிவை எதிர்த்துப் போராடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

நாட்டில் சிறை செல்லும் 64 வீத மானவர்கள் போதைப்பொருள் சார்ந்த தவறுகளுக்காக பிடிபடுபவர்களாவர். 18-26 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்கள் இதற்குக் கூடுதலாக இரையாகின்றனர். அவர்களின் எதிர்காலம், எதிர்பார்பார்ப்புகள் அழிந்து போகின்றன. இதனை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு பிள்ளைகள் பிறக்கும் போது பெற்றோர் பெரும் எதிர்பார்ப்புகளை கொண்டிருப்பர். ஆனால் தமது கண்முன்னே தமது பிள்ளைகள் நாசமடைவதைக் கண்டு அவர்கள் வேதனை அடைகின்றனர். பெற்றோர் சமூகத்தில் இருந்து ஓரங்கட்டப்படுகின்றனர். இந்தப் பேரழிவிற்கு முழுக் குடும்பமும் இரையாகின்றது. முழுக் குடும்பம் அலகும் வீழ்ச்சியடையும் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துள்ளது.

கிராமம் கிராமமாக இந்த மாயச் சூறாவளி பரவி வருகிறது. உடைகளை காயவைக்கவோ, நெல்லை காயப் போடவோ முடியாது. மகளை தனியாக வீட்டில் நிறுத்தி விட்டுச் செல்ல முடியாது என கிராமங்களில் வாழும் தாய்மார்கள் கூறுகின்றனர். கிராமங்கள் பீதியில் உள்ளன. குற்றச் செயல்கள் கிராமங்களில் உருவாகின்றன. இந்தப் பேரழிவு முழு சமூகத்தையும் ஆட்கொண்டுள்ளது.

வீதி விபத்துக்களில் அநேகமானவை போதைப் பொருட்களுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. எமது நாட்டில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வன்முறைகளில் அதிக மானவை போதைப்பொருட்கள் சார்ந்தவை. பொது இடங்களில் விபரீதமான பாலியல் ஆசைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்தப் பேரழிவு நாட்டில் பாரிய வீழ்ச்சியை உருவாக்குகிறது. கட்டுநாயக்க - கொழும்பு நெடுஞ்சாலையின் பாதுகாப்பிற்கு அதிரடிப் படையை ஈடுபடுத்த நேரிட்டுள்ளது. கேபிள்கள் வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன. யானை வேலிக்கு இடப்பட்டுள்ள பெட்டரி திருடப்படுகின்றன. பாலங்களில் உள்ள இரும்பை வெட்டி எடுத்துச் செல்கின்றனர். இதனால் நாட்டில் ஸ்திரமற்ற நிலை உருவாகின்றது.

பொது சமூகத்தினதும் பிரஜைகளினதும் பாதுகாப்பிற்காக இந்தப் பேரழிவைத் தோற்கடிக்க வேண்டும். நாம் எடுக்கும் முன்னெடுப்பை நிச்சயமாக வெற்றி பெறச் செய்வோம். இதனுடன் தொடர்புடைய பாரிய நிதி வலையமைப்பு காணப்படுகிறது. ஒரு கிலோ 2 கோடி ரூபாவை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் போதைப் பொருள் உள்ளது. எமக்கு 800-900 கிலோ பிடிபடுகிறது. நாட்டிற்குள் வரும் அனைத்து போதைப் பொருட்களையும் நாம் கைப் பற்றவில்லை. அனைத்தையும் கைப்பற்றினால் அவை நாட்டிற்குள் வராது. அவர்கள் அனுப்பும் தொகையில் சிறு தொகையேபறிமுதல் செய்யப்படுகிறது.

எந்தளவு தொகை விநியோகிக்கப்படுகிறது என்பது கைப்பற்றும் தொகையின் மூலம் கணிக்கலாம். கருப்புப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வர்த்தகமாக இது மாறியுள்ளது. அதனால் அவர்களிடையே சந்தையை பங்கு போடுவதில் மோதல் காணப்படுகிறது. ஒவ்வொரு குழுக்களுக்கிடையில் துப்பாக்கிச் சூடு நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரதேச எல்லைகளுக்குள் மற்றைய தரப்பு நுழைய முடியாது. போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபட்டதாகவே இந்தக் கொலைகள் நடைபெறுகின்றன.

சில இராணுவ முகாங்களில் இருந்து 73 ரி - 56 ரக துப்பாக்கிகள் அவர்களின் கைகளுக்குச் சென்றுள்ளன. அதில் சுமார் 35 துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டுள்ளன. அதற்குப் பயன்படுத்தும் ரவைகள் பிடிபட்டுள்ளன. இராணுவ கேணல் ஒருவர் தான் இவற்றை வழங்கியுள்ளார். அதற்காக அவரின் வங்கிக் கணக்கிற்கு பணம் கிடைத்துள்ளது. ஒரு பொலிஸ் அதிகாரி தனது ஆயுதத்தை விற்பனை செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார். அந்த ஆயுதக் குழுக்களிடமுள்ள பண பலத்தினால் இவை நிகழ்ந்துள்ளன.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வாகனங்கள் இன்றி வாகன இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலுள்ள சிலர் சட்ட விரோத வாகனங்கள் பாவனைக்கு வரபங்களித்துள்ளனர். குடிவரவு குடியகல்வு திணைக்களம் தேசிய பாதுகாப்பிற்காக பங்களிக்கும் நிறுவனம். ஆனால் சில அதிகாரிகள் பாதாள தலைவர்களுக்கு கடவுச்சீட்டு தயாரித்து வழங்கியுள்ளனர். இவ்வாறு தான் அரச கட்டமைப்பிற்குள் இந்தப் பேரழிவு நுழைந்துள்ளது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தீர்க்கமான கட்டத்திற்கு வர வேண்டும். அதற்கான நேரம் வந்துவிட்டது. நாம் இதனைச் செய்யாவிட்டால் வேறு யாரும் செய்யமாட்டார்கள் என எம்மிடம் பலரும் கூறியுள்ளனர். இதனை மாத்திரம் நிறைவேற்றுங்கள் புண்ணியம் கிடைக்கும் என சில தாய்மார் கூறுகின்றனர். பொலிஸ்மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பலரும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றார். (ந-7)

## போதைப்பொருள்...

திஸாநாயக்க பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி அநுர இதனைப் பகிரங்கமாக அறிவித்தார்.

அங்கு அவர் ஆற்றிய உரையில், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் உடனடியாக போதைப்பொருள் பாவனையில் இருந்து அகன்று செல்ல வேண்டும். உங்களைக் கவனித்துக் கொள்ள நாம் தயார். அவர்கள் எமது பிள்ளைகள். பொருளாதாரப் பிரச்சினை, விளையாட்டு, கலாசாரம், இசை, பொழுதுபோக்கு என எதுவும் இன்றி ஒரே பொழுதுபோக்கு போதையாக இருப்பது என அடிமையான வர்கள் கருதுகிறார்கள்.

அது அவர்களுடைய தவறல்ல. சிறந்த விளையாட்டுக் கலாசாரம் உருவாக்கப்படவில்லை. பல தசாப்தங்களுக்கு முன்னர் விளையாட்டுக் கலாசாரம் காணப்பட்டது. இன்று அவ்வாறான கலசாரம் இல்லை. எனவே அந்த இளைஞர்களுக்கு குறை சொல்லிப் பயனில்லை. எனவே பொழுதுபோக்குச் சார்ந்த இடங்கள், பாடல், இசை, கலாசாரம், சமூகம் தொடர்பான பிணைப்புத் தொடர்பான சமிக்ஜையை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்காக பாரிய திட்டமொன்றை ஆரம்பிக்க இருக்கிறோம்.

அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது எமது பொறுப்பாகும். சுயமாக சென்றுச் புனர்வாழ்வு பெறக் கூடிய சில இடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமது பிள்ளையை ஒப்படைக்குமாறு தாய்மாருக்கு அழைப்பு விடுக்கிறோம். உங்கள் பிள்ளையை மீட்டு உங்களிடம் கையளிப்போம். புனர்வாழ்வு மையங்களில் இருந்து இளைஞர்கள் தப்பிச் செல்கிறார்கள். இதனைத் தடுக்க விஞ்ஞான ரீதியான புனர்வாழ்வுத் திட்டமொன்றை தயாரித்துள்ளோம்.

போதைப் பொருள் விற்பனை செய்வோர் சரணடைய வேண்டும். தொடர்புள்ள சகல அரச நிறுவனங்களையும் இணைத்து தேசிய செயற்பாட்டு மையம் ஒன்றை உருவாக்க இருக்கிறோம். சுங்கம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், பொலிஸ், இராணுவம், புலனாய்வுப் பிரிவு என்பன உள்ளடங்கிய மையம் உருவாக்கப்படும். தப்பிச் சென்றவர்கள் மறைந்துள்ள நாடுகள் எமக்குத் தெரியும். இருக்கும் இடமும் தெரியும். எனவே அவர்கள் சரணடைய வேண்டும். சுற்றிவளைப்புகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம். எமது நாட்டையும் சமூகத்தையும் பிள்ளைகளையும் ஒரு சிறு குழுவுக்கு இரையாக்க முடியாது.

போதைப்பொருள் ஒழிப்பில் அரசியல் அதிகாரத்திற்கு முக்கிய பங்கு உள்ளது. அரசியல்வாதிகளுடன் நெருங்கிப் பழகி அவர்களின் தேவைகளை நிறைவேற்றி மறைவான அதிகாரத்தை போதைபொருள் வர்த்தகர்கள் பெறுகிறார்கள். சில அரச பொறிமுறையில் நுழைந்து விசாரணைகளை தடுக்கவும் வீதியில் சுட்டுக் கொலை செய்வதற்கும் இந்த மறைவான அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸை...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

போதை ஒழிப்பு தேசிய செயற்றிட்டத்தை நேற்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் அநேகமான பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். உடனடியாக அந்த வலையமைப்பில் இருந்து அகன்று செல்லுமாறு ஏனைய தரங்களில் உள்ளோரிடம் கோருகிறோம்.

உங்கள் தொழிலின் பாதுகாப்பு சீருடையின் கௌரவத்தைப் பாதுகாத்து அகன்று செல்லாவிட்டால், நாம் அவர்களை நீக்குவோம் என்றார். (ந-7)

## துணைவேந்தர்...

சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் யார் என்றே தெரியாது என அவரது சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானை அவரது சட்டத்தரணியான பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில நேற்று சந்தித்ததன் பின்பே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிள்ளையானின் அடிப்படை மனித உரிமைகள் மீதான மனு விசாரணை இன்று (31) கொழும்பு மேல் நீதிமன்றில் இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பில் கலந்துரையாட அவரைச் சந்தித்தேன்.

"பிள்ளையான் தற்போது ஏழரை மாதங்களுக்கும் மேலாக சிஐடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தினால் தொடர்ந்து தாமதப் படுத்தப்படுவதன் காரணமாக நாளைய தினம் (இன்று) வழக்கு விசாரணைக்கு வருகிறது.

பிள்ளையான் மீது இருக்கும் குற்றச்சாட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்று நாட்டில் கூறப்பட்டாலும், அவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பது, துணைவேந்தர் ஒருவர் காணாமல்போயிருப்பது தொடர்பில் ஆகும்.

இந்த நிலையில், இவ்வாறு காணாமல் போயிருக்கும் துணைவேந்தர் யார் என்பது கூட பிள்ளையானுக்குத் தெரியாது. இந்நேரத்தில் இவ்வாறான விடயங்களை நாம் பேச முடியாது. நாளை (இன்று) வழக்கு விசாரணை இருப்பதன் காரணமாக அவற்றை ஊடகங்களுக்கு முன்னால் வெளியிடுவது சட்டத்திற்கு முரணானதாகும்" என்றார்.

2006ஆம் ஆண்டில்கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல்போன சம்பவம் தொடர்பில் பிள்ளையான் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## போதைவஸ்துக்...

போது கடந்த 3 நாளில் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர்.

அதன் பிரகாரம் 160 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களும் போதை மாத்திரை, ஹெரோயின், மாவா என்பன வற்றுடன் ஆறு சந்தேகநபர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களிடம் போதைவஸ்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதன்பின் அவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,33)

## போதைவஸ்து தடுப்பு..

போடுகிறது எனப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் நாட்டு நிலைமைகள் சம்பந்தமாக...

வழங்கிய செவ்வியிலேயே அவர் இக் கருத்தினை முன்வைத்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அரசாங்கம் தமக்குச் சார்பானவர்களுக்கு ஒரு முகத்தையும் தமக்கு எதிரானவர்களுக்கு இன்னொரு முகத்தையும் காட்டிக் கொண்டு, பாரபட்சமாக நடந்து கொள்கிறது.

அத்துடன் நாட்டின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக வகுப்பு எடுத்த அரசாங்கம், இன்று தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையை மறந்துள்ளதாகவும் குற்றச்சாட்டினார்.(ந-7)

## போதைவஸ்தை...

படுத்தும் ஆணைக்குழு அறிமுகப் படுத்தியுள்ளது.

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டு சபையின்வேண்டுகோளுக்கு இணங்க அறிமுகப்படுத்தியுள்ள '1818' துரித தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் நாடு பூராகவும் இயங்கும் போதைப் பொருள் வர்த்தகம், விநியோகம் அல்லது அதனுடன் தொடர்புடைய சந்தேகத்திற்கு இடமான செயற்பாடுகள் குறித்து தகவல்களை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## வெளி...

வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த விளம்பரங்களில் பெரும்பாலானவை போலியானவை என்றும், அவை பணியகத்திடமிருந்து ஒப்புதல் பெறவில்லை என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே, வெளிநாட்டு வேலை தேடுபவர்கள், அத்தகைய வேலைகளை வழங்கும் நிறுவனம் பணியகத்தில் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், வேலைவாய்ப்பு பணியகத்தால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பணம் செலுத்துவதற்கு முன்பு அல்லது பயண ஆவணங்களை ஒப்படைப்பதற்கு முன்பு சரிபார்க்க வேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், மோசடி நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் பற்றிய தகவல் யாரிடமாவது இருந்தால், 011 288 2228 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 1989 என்ற துரித எண் மூலமாகவோ வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொலிஸ் பிரிவுக்குத் தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 5998
M 1 1 6 8 2 5
அத சம்பத M 6 8 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 0573

சுப தவசக்
திகதி 2025.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 114
மிதுனம் 19 24 40

தன நிதானய
திகதி - 2025.10.30
சீட்டிழுப்பு இலக்கம் - 2028
S 03 34 38 57 S

மெகா பவர்
திகதி 30/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2346
U 16 01 02 19 58

ஜய
திகதி 2025.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 0266
F 5 5 6 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4240
சீட்டிழுப்பு திகதி 30.10.2025
J 29 70 73 80
J

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.30
சீட்டிழுப்பு இலக்கம் 1307
இடபம் 26 38 47 61 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.10.2025 வெற்றி வாரம் 0706
சுபிரி தன சம்பத
M 0 3 4 5 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,528,594.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2972
சீட்டிழுப்பு திகதி 2025.10.30 தினம் வியாழக்கிழமை
05 11 34 58 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,178,753.60

சனிதா
திகதி 30.10.2025 வெற்றி வாரம் 5133
18 48 56 57 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,424,269.60

சசிரி
0802 30.10.2025 வியாழக்கிழமை
14 30 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4684
சீட்டிழுப்பு திகதி 30.10.2025 தினம் வியாழக்கிழமை
08 18 31 36 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,624,117.60

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 12 01 35 36 74
2148 30.10.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.603,680,662.60

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2798
சீட்டிழுப்பு திகதி: 2025.10.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,350,367.20
18 51 57 75 N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை.
ஆண், பெண் இருபாலாரும் வழங்கலாம்.
HLA Report இருப்பின் Whatsapp பண்ணவும்.
076 540 6732 (Whatsapp/ Call)
077 656 0222
(5769)


# மருத்துவர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்பு!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று (31) காலை 8.00 மணி முதல் ஆரம்பமாகும் வகையில் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளும் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி அனைத்து தினசரி சிகிச்சை சேவைகளும் பாதிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் சுகாதார அதிகாரிகள் நியாயமான தீர்வினை வழங்கினால், வேலைநிறுத்தம் குறித்து மீளப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ந-7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-4226)
UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வீடு வாடகைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
076 140 1517
(5775)

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம்
போகாமை | வாதம் | வயிற்றுப்புண் | Gastritis | அல்சர்
மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை,
Acu சிகிச்சைகள் | அட்டாங்க யோகம் கற்கலாம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(5780)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=
தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்
தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)



மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd
(5725)

KBK
கந்தர்மடம் (கந்தர்மடச் சந்தி) கொழும்புத்துறை (சுவாமியார் வீதி)
கணக்கீட்டு வளவாளர்
திரு.க.பா.பாலகஜன் SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
A/L 2026, A/L 2027
Theory, Paper Class, Zoom online Classes
- தவணைப் பரீட்சையில் குறைவான புள்ளிகள் எடுக்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்
- உங்களுக்கு வசதியான நேரத்தில் வகுப்புக்கள் நடைபெறும்.
- A/L 2026 மாணவர்கள் A/L 2027 மாணவர்களுடன் இணைந்து கற்க முடியும்.
ஆரம்பம் : 03.11.2025 திங்கள் மாலை 03.00 மணி
077 4520 043
(C-4224)

புதிய கல்வியாண்டு - 2026
தரம் 6 கணிதம்
ஆசிரியர் திரு.T.அற்புதராஜா
புதிய பிரிவு ஆரம்பம் : திங்கட்கிழமை (03.11.2025) மாலை 5.00 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
192/20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0777 222 478
(5757)

## பணியாளர் தேவை


கிளிநொச்சியில் இயங்கிவரும் கல் அரிவு யாட் ஒன்றிற்கு மெசின் கல்லு அரியும் வேலையாள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 615 6958, 076 615 6953
(5781)

## மணமக்கள் தேவை

வெளிநாட்டிலுள்ள சூரிய செவ்வாய் மணமக்களுக்கு (1995 - 2005) மணமக்கள் தேவை.
077 889 4353 /
+491741789740 (Whatsapp)
+49764752219 (viber)
(5779)


## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 10 - 1994



உதிர்வு 29 - 10 - 2025

### செல்வன் சிவகுமார் அகீபன்

(இலங்கை மின்சார சபை ஊழியரும், முன்னாள் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும்)

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் அகீபன் அவர்கள் கடந்த 29.10.2025 புதன்கிழமை அன்று அகால மரணமானார்.


அன்னார் சிவகுமார்(முன்னாள் பல்கலைக்கழக ஊழியர்) - சறோஜாதேவி தம்பதியினரின். கனிஷ்ட புத்திரனும் விபுலன்(கனடா), லக்ஷிகா(யாழ். பல்கலைக்கழக 3 ம் வருட மாணவி - விஞ்ஞான பீடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.10.2025 இன்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(5778)
தகவல் :
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



கலைக்குரிசில், சிற்பரசன், சிற்பகலாஜோதி, சிற்பகலாவாரிதி,

### ஸ்தபதி நடராசா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார்

(ஸ்தாபகர் – திர்ஷிகா கலைக்கூடம்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திர்ஷிகா கலைக்கூட ஸ்தபதியார் நடராசா சற்குருநாதன் (குரு) நேற்று (30.10.2025) வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ச.வர்க்கீசன் (மகன்) - 077 808 9782
ச.விதுர்ஷன் (மகன்) - 077 801 0336
க.கருண்ராஜ் (மருமகன்) - 077 942 7543
ம.நிஷாந்தன் (மருமகன்)
+358 40 026 5282 பின்லாந்து
(5782)
தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org